# விபாஷா

2012 ஆகஸ்ட் – செப்டெம்பர் | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு | மலர் 2 | இதழ் 5

# நாணயத்தாள்களில் தமிழ் இடம்பெறாமை தவறாகும். திருத்திக்கொள்வதற்கு மத்திய வங்கி இணக்கம்.



அண்மையில் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் மிக முக்கியமான வாசகங்கள் தமிழில் இடம்பெறாமை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முன்வைத்த முறைப்பாடு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது தமது தவறை பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட மத்திய வங்கியானது, நாணயத்தாள்களை மீண்டும் அச்சிடுகையில் மும்மொழிகளுக்கும் சமத்துவத்தை வழங்கி, தவறை திருத்திக்கொள்வதற்கு உடன்பட்டது.

இலங்கை அரசியலமைப்பில் தமிழ் மொழி அரச கரும மொழியாகவும் தேசிய மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கையில், அண்மையில் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் **“இலங்கை அரசுக்காக வெளியிடப்பட்டுள்ள இந்த நாணயத்தாளானது இலங்கையினுள் எந்தவொரு பணக் கொடுக்கல் வாங்கலுக்கும் ஏற்புடையதாகும்”** எனும் வாசகம் தமிழ் மொழியில் பொறிக்கப்படாமை தொடர்பாக இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தமிழ் மொழியைப் பிரயோகிக்கும் இலங்கைப் பிரஜைகள் மீது பாரபட்சம் காட்டுவதாக உள்ளதுடன், இதற்கு நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் மத்திய வங்கியின் ஆளுநர் பொறுப்புக்கூற வேண்டுமென முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கமைய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம், எதிர்காலத்தில் அச்சிடவுள்ள நாணயத்தாள்களில் மேற்குறிப்பிட்டுள்ள வாசகத்தை தமிழ் மொழியிலும் பொறிக்குமாறு மத்திய வங்கியின் ஆளுநருக்கு பணிப்புரை வழங்குமாறு கேட்டுக்கொண்டது.

முறைப்பாடு மீதான விசாரணை ஜூலை 16ஆம் திகதி இடம்பெற்றதுடன், இதில் மத்திய வங்கியின் ஆளுநரின் தரப்பில் நாணயக் கட்டுப்பாட்டு அதிகாரி, பிரதி நாணயக் கட்டுப்பாட்டு அதிகாரி மற்றும் மத்திய வங்கியின் சட்ட உத்தியோகத்தர் ஆகியோரும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் திரு. லயனல் குருகேயும் முறைப்பாட்டாளர்களின் தரப்பில் சட்டத்தரணி திரு எஸ். ஜீ. புஞ்சிஹேவாவும் சமுகமளித்திருந்தார்கள்.

நாணயத்தாள்களை மீண்டும் வெளியிடும்போது மொழி உரிமைகள் மீறப்படாத வகையில் புதிய மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு நாணயத்தாள்களை வெளியிடுவதற்கும் இது தொடர்பிலான விடயங்களை தெளிவுபடுத்தும் ஓர் அறிக்கையினை முறைப்பாட்டுத் தரப்பிற்கு வழங்குவதற்கும் மத்திய வங்கி உடன்பட்டது.



## மொழி ஒரு பொதுச் சொத்து

முல்லைத் தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் வீதியில் இராணுவம் தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள காணியொன்றில் காட்சிப்படுத்தியுள்ள பெயர்ப்பலகையொன்று இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

இதனூடாக இராணுவம் “இது இராணுவத்துக்குச் சொந்தமான சொத்து” எனும் செய்தியைக் கூற முனைந்துள்ளது. சிங்கள மொழியில் இச்செய்தி தெளிவாக கூறப்பட்டிருப்பினும் தமிழ் மொழிச் செய்தியில் முழுமையாக திரிபு படுத்தப்பட்ட மொழிப் பிரயோகத்தைக் காண முடிந்துள்ளது. இதனை “இது இராணுவக்கு உர்பி இறிகி காணி” என உச்சரிக்க வேண்டியுள்ளது. சரியான பிரயோகம் “இது இராணுவத்திற்குரிய காணியாகும்” என்பதாகும்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மொழி திரிபுபடுத்தப்பட்ட நிலையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த இவ்வாறான சில பெயர்ப் பலகைகள் தொடர்பாக விபாஷா செய்தி மடல் ஏற்கனவே பல தகவல்களை வெளிக்கொணர்ந்தபோதும் இவ்விடயம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களின் கவனம் செலுத்தப்படவில்லையெனத் தெரிகிறது.

இப்படம் அடங்கிய தகவல் 2012.08.06 ஆம் திகதி யாழ்ஓசை பத்திரிகையில் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

படம் : எம். நியூட்டன்
யாழ் ஓசை: 2012.08.06

## கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டு ஜூலை மாதமளவில் எட்டு மாதங்களைக் கடந்துள்ளபோதும் குறித்த அறிக்கை இதுவரை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்படவில்லை.

பல்வேறு சமூக அமைப்புகளும் புலமையாளர்களும் இதனை அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்தவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளபோதும், மூன்று தசாப்தகால யுத்தத்தால் தமிழ், சிங்கள மக்கள் பிரிக்கப்பட்டிருப்பினும்கூட அதற்கு ஏதுவான காரணிகளை ஆய்ந்தறியும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இதுவரை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் வெளிவராமை மிகவும் துர்ப்பாக்கிய நிலையென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தேசியத் திட்டம் தயார்

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் செயற்பாட்டு தேசியத் திட்டமொன்றுக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள அதேநேரம், குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு சம்பந்தப்பட்ட அமைச்சு உள்ளிட்ட சில நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கலாசாரம் மற்றும் மொழித்துறை சார்ந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் முக்கிய பொறுப்பு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. தவிரவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, விளையாட்டுத் துறை அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, நீதி அமைச்சு, பொலிஸ் திணைக்களம், சனாதிபதி செயலகம் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகிய நிறுவனங்களுக்கும் ஒருசில பரிந்துரைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்செயற்பாட்டுத் திட்டமானது சனாதிபதியின் செயலாளர் திரு. லலித் வீரதுங்க அடங்கலான செயலணியினால் தயாரிக்கப்பட்டது.

செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைவாக பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்போது பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும் தலைமை நிறுவனம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களுக்கு அதற்கானதொரு கால வரம்பும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சனாதிபதி செயலாளர் திரு.லலித் வீரதுங்க இந்த தேசிய செயற்பாட்டுத் திட்டத்துக்கு ஏற்புடைய ஆணைக்குழு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் தெரிவு செய்யப்பட்டதும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியதுமான அனைத்து பிரதான துறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இச்செயற்பாட்டுத் திட்டத்தில் கலாசார மற்றும் மொழித்துறைக்கு ஏற்புடைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் தலைமை நிறுவனம் மற்றும் கால வரம்பு உள்ளிட்ட பகுதிகள் விபாஷாவின் இம்முறை இதழின் ஐந்தாவது பக்கத்தில் வெளிவந்துள்ளன.

# உள்ளூர் சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு விசேட விருதுகள்

சமீபத்தில் சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட சிங்கள தமிழ் மற்றும் முஸ்லீம் எழுத்தாளர்களின் சினேகபூர்வ சந்திப்பில் முன்வைக்கப்பட்ட யோசனை ஒன்றுக்கமைய உள்நாட்டு சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு விசேட விருதொன்றினை வழங்கி வைக்க தேசபந்து திரு. சிறிசுமன கொடகே முடிவுசெய்துள்ளார். இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் 2012 கொடகே இலக்கிய விருது வழங்கும் விழா முதல் இதற்கான விருதுகளை வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்ச்சி பெற்ற எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான மடுலுகிரியே விஜேரத்னவினால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனை அனைவரது பாராட்டையும் பெற்றுக்கொண்டது. இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்புகளுக்கு தொடர்ந்தும் விருதுகள் வழங்கப்படுவதானது உள்ளூர் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு தடைக்கல்லாக அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டிய திரு. விஜேரத்ன சிங்களம் தமிழ் மற்றும் முஸ்லீம் இனக்குழுமங்களுக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கு இலக்கியத் துறையில் இதுபோன்ற விருதுகளை வழங்கி வைப்பது பயனுள்ளதாக இருக்குமெனவும் தெரிவித்தார். ஒன்று கூடியிருந்த எழுததாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் அரச இலக்கிய உபகுழு அடங்கலாக இலக்கியப் பணிகளுக்கான விருதுகளை வழங்கி வரும் பிற அமைப்புகளும் சிங்கள, தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் கவனஞ்செலுத்துவது அவசியம் எனத் தெரிவித்தனர்.

# தெஹிவளை அரச உத்தியோகத்தர்களுக்கும் பிரஜைகளுக்கும் தமிழ் மொழிக் கல்வி

தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச உத்தியோகத்தர்களிடையே இரு மொழி அறிவினை வளர்க்கும் வேலைத் திட்டத்தின் கீழ் தென் கொழும்பு போதனா மருத்துவமனையின் தாதியர் பணியணியைச் சேர்ந்த 400ற்கு அண்மித்த தொகையினருக்கு தமிழ் மொழிப் பயிற்சியை வழங்கும் பாடநெறியொன்று சமீபத்தில் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கௌரவ வாசுதேச நாணயக்கார அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் இரு மொழிக் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் இப்பாடநெறியானது தெஹிவளை பிரதேசச் செயலாளர் திருமதி சம்பா என். பெரேராவின் மேற்பார்வையின் கீழ் தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உத்தியோகத்தர் திரு.ஏ.என். திலகசிறியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெஹிவளை பிரதேசச் செயலாளர் பிரிவின் மொழிச் சங்கங்களுக்கான இரவு நேர தமிழ் மொழி வகுப்புகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# மொழியின் நல்லிருப்பில் கடுமையான தாக்கத்தைச் செலுத்தும் தொழில்நுட்பம்

பேராசிரியர் ஜே.பீ.திசாநாயக்க

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்று தொழில்நுட்பமானது பிரமிக்கவைக்கும் அளவுக்கு மொழி மீது தாக்கம் செலுத்துவதாக பேராசிரியர் ஜே.பி.திசாநாயக்க தெரிவிக்கின்றார்.

சமீபத்தில் (ஜூலை 02) கொழும்பு ஜயிக் ஹில்ரனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே பேராசிரியர் இதனைத் தெரிவித்துள்ளார். உள்ளூர் மொழிகளின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரசித்தம் செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்து வைப்பதற்காக இந்த செய்தியாளர் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஏற்றுக்கொள்ளப்படாத பல்வேறு முறைமைகள் காரணமாக உருவான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தரப்படுத்தல் வழிசெய்தது. மொழி மற்றும் ஆவணம் எதுவாயினும் இவற்றின் இயக்கச் சூழமைவு எதுவாயினும் "யுனிகோட்" என அறியப்படும் சர்வதேச நியமமானது ஒவ்வொரு உபகுறியீட்டுக்கும் அங்கீகரிக்கப்பட்ட எண்உரு ஒன்றினை வழங்குவதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை தெரிவிக்கிறது.


"யுனிகோட்" என அறியப்படும் சர்வதேச நியமம் (இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை, இலங்கை கட்டளைகள் பணியகம், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கற்கைப் பிரிவு, மொறட்டுவை பல்கலைக்கழகம், சயன்ஸ் லேண்ட் மற்றும் மைக்ரோசொப்ற் ஆகிய நிறுவனங்கள் இணைந்து குறியீடுகள், சாவிப் பலகை திட்டவமைப்புகள் அடங்கிய இரண்டு நியமங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளன.

தகவல் பரிமாற்றத்துக்கான சிங்கள எழுத்துக் குறி தொடர்பான இலங்கை நியமம் (இலங்கை நியமம் 1134 (2004) எனவும் தகவல் பரிமாற்றத்துக்கான தமிழ் எழுத்துக் குறி தொடர்பான இலங்கை நியமம் (இலங்கை நியமம் 1326 (2008) எனவும் அறியப்படும் இரண்டு நியமங்களும், யுனிகோட் நியமத்துடன் இயைபைக் கொண்டுள்ளன. கணினியில் எழுத்துக்களை களஞ்சியப்படுத்த வேண்டிய விதம் இந்நியமங்களில் தரப்பட்டுள்ளது. இதன்படி ஆவணம் ஒன்றாகவிருப்பினும் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில எழுத்துக்கள் உள்ளடக்கப்படலாம்.

இலங்கை நியமங்களுக்கு இயைபாக கணினிகளைக் கையாள்வதற்குத் தேவையான சாவிப் பலகை இயக்கிகளும் தயாரிக்கப்பட்டுள்ளதாக குறித்த முகவராண்மை தெரிவித்துள்ளது.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் தலைவரும் பேராசிரியருமான பீ. டப்ளியு ஏபாசிங்ஹ, பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான திரு. ரொஷான் தேவபுர உள்ளிட்ட பெரும்பாலான தகவல் தொழினுட்ப நிபுணர்களும் இச்செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# மொழிசார்ந்த வெற்றிகள் ஓர் ஆழமான தேடல்



முும்மொழிகளிலும் புகையிரத அறிவிப்புகள், சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மொழிசார்ந்து மேலும் ஒரு வெற்றி பேரூந்து பெயர்ப் பலகைகள் மும்மொழிகளிலும்

“ மொழி சார்ந்த பிரச்சினைகளில் மக்களை ஏமாற்றுவது தொடர்பில் இலங்கைக்கு மிக நீண்டகால வரலாறு உண்டு. ஆனால், இந்த ஏமாற்றத்தின் இறுதி விளைவு எவ்வளவு கசப்பானதாக அமைந்தது என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டிய தேவைப்பாடு இல்லை. ஆகவே, இந்த நிறுவனங்களின் தலைவர்கள் இதனை விடக் கூடிய கவனத்துடன் இப்பிரச்சினையை நோக்க வேண்டும். ”

விபாஷா செய்தி மடலின் கடந்தகால இதழ்கள் சிலவற்றில் வெளியிடப்பட்டிருந்த சில செய்தித் தலைப்புகளே இவை.

மேலோட்டமாகப் பார்க்குமிடத்து எதிர்பார்ப்புகளைக் கொண்டு வருவதான இத்தலைப்புகள் வெளியாகிய ஒரு சில தினங்களின் பின்னர், இந்த எதிர்பார்ப்புகள் தகர்ந்துபோகும் தகவல்களையும் அறிக்கைகளையும் எம்மால் கேட்க முடிந்தது.

ஒரு சில அரச நிறுவனங்கள் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தச் செய்வதாக அளிக்கும் வாக்குறுதிகள் சொற்களுக்கும் செய்திகளுக்கும் மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதான செய்தியையே இத்தகவல்கள் கொண்டு வருகின்றன.

பொலிஸாருக்கும் இவ்வாறான குற்றச்சாட்டே எழுப்பப்படுகிறது. தாம் மொழிக் கொள்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதாகவும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல் உள்ளிட்ட கடமைகளை இரு மொழிகளிலும் மேற்கொள்வதாகவும் அவர்கள் பெரும்பாலும் கூறுகிறார்கள்.

ஆனால், ஒரு முறைப்பாட்டைச் செய்வதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் சாதாரண ஒரு பிரஜை இதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலைமைக்கு முகம் கொடுப்பதாயின், தமது மொழியில் அலுவல்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இழந்துள்ளதற்கும் மேலாக தாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்ற உணர்வு அவர்களில் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. இது மிகவும் மோசமான ஒரு நிலைமையாகும்.

மொழி சார்ந்த பிரச்சினைகளில் மக்களை ஏமாற்றுவது தொடர்பில் இலங்கைக்கு மிக நீண்டகால வரலாறு உண்டு. ஆனால், இந்த ஏமாற்றத்தின் இறுதி விளைவு எவ்வளவு கசப்பானதாக அமைந்தது என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டிய தேவைப்பாடு இல்லை. ஆகவே, இந்த நிறுவனங்களின் தலைவர்கள் இதனையும் விடக் கூடிய கவனத்துடன் இப்பிரச்சினையை நோக்க வேண்டும்.

சிலசமயம் இவர்கள் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இதய சுத்தியோடு சில செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், இச்செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாவிடின், இவர்களே இதற்கான காரணத்தையும் ஆராய வேண்டும்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையை மாத்திரம் மேற்கொள்ளுவது போதுமானதல்ல. இது படிப்படியாக முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு நீண்ட செயற்பாடாகும். ஆரம்பக்கட்டத்திலேயே இந்நீண்ட செயற்பாடானது தேங்கி நிற்பதாயின் பிரச்சினை காணப்படும் இடமும் இதுவே என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவேதான் தீர்வுச் செயற்பாகளுக்கான ஒரு கண்காணிப்பு வேலைத்திட்டம் தேவைப்படுகிறது. செயற்பாடுகள் எங்கே தடைப்பட்டுள்ளன? இதற்கான காரணங்கள் யாவை? என்பதை சரியாகப் புரிந்து கொண்டு இதற்கான தீர்வுகளை இத்தகைய கண்காணிப்பு வேலைத்திட்டமொன்றின் மூலம் மாத்திரமே வழங்க முடியும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் காணப்படுகின்ற வளங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறை என்பன இத்தீர்வுகளை முன்னோக்கி நகர்த்துவதற்கு தடையாகக் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

ஆனால், சமீபத்தில் இது குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த திரு எஸ். ஸ்ரீதரன், சில பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளபோதிலும் தமிழ் மொழியில் முறைப்பாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லையெனக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் உண்மையெனில், இதற்கான காரணங்களை தெளிவுபடுத்துவதும் அதிகாரிகளின் பொறுப்பாகும்.

வடக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி எண்பது சதவீதம் பாவனையிலுள்ளதாக கூறப்படுவதை நிராகரிக்கும் திரு.ஸ்ரீதரன் இதனை நிரூபித்துக் காட்டுமாறும் சவால் விடுத்துள்ளார். இது ஒரு கடுமையான சவால்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் மக்களுக்குக்கூட தமது தாய் மொழியில் ஒரு முறைப்பாட்டைச் செய்ய முடியாத நிலை காணப்படின், அது மிகவும் பாரதூரமான ஒரு நிலைமையாகும். பொலிஸ் நிலையம் தவிர சுகாதாரச் சேவை, போக்குவரத்துச் சேவை, பாதுகாப்புத் துறை உள்ளிட்ட பல துறைகளிலும் இப்பிரச்சினை புரையோடிப்போயுள்ளது. இதேகணம், அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக ஊடகங்கள் பரவலாக அறிக்கையிடுகின்றன.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் நாம் மேற்கோள்காட்டிய, இதற்கு முன்னர் நாங்களே வெளியிட்ட தலைப்புகள் மூலமாகவும் அவ்வாறான சில சந்தர்ப்பங்களே கூறப்படுகின்றன. அரசாங்கம் ஆக்கபூர்வமான முறையில் தீர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கலாம்.

ஆனால், ஏன் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படுவதில்லை என்பதே பிரச்சினையாக உள்ளது.

இது தொடர்பில் சமீபத்தில் அமைச்சர் விமல் வீரவன்சவும் தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அதாவது,

சமீபத்தில் அரசாங்க நிறுவனமொன்று வடக்கைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களுக்கு நியமனக் கடிதங்களை சிங்களத்தில் வழங்கியுள்ளது. இது தவறாகும். குறித்த இரு தமிழ் சகோதரர்களுக்கும் நியமனக் கடிதங்களை தமிழ் மொழியில் வழங்கியிருக்கலாம். இத்தவறை அப்பொழுதே திருத்துமாறு நான் ஆலோசனை வழங்கினேன். தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் மொழி ஒரு பிரதான காரணியாகும். மேலும், மொழியானது கூருணர்வு மிக்கது. தமது நியமனக் கடிதத்தை தமது மொழியில் பெற்றுக்கொள்ள முடியாதெனில், அது உண்மையில் ஒரு பிரச்சினையாகும். சிலருக்கு இது ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இத்தகைய கூருணர்வு மிக்க பிரச்சினைகளே பாரிய பிரச்சினைகளுக்கு ஏதுவாகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சில உத்தியோகத்தர்களின் பொறுப்பற்ற தன்மையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

எனவே, அமைச்சர் உத்தியோகத்தர்களையே குற்றம்சாட்டியுள்ளார்.

தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பின் பெரும்பகுதி உத்தியோகத்தர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையால், இக்குற்றச்சாட்டை முழுமையாக நிராகரித்துவிடவும் முடியாது. ஆனால், தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகையில் மேலும் பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

உளப்பாங்கு ரீதியான காரணிகளுக்கு இதில் பிரதான பங்கு உண்டு. மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தம்மிடமுள்ள உளப்பாங்கு ரீதியான பிணைப்பு மற்றும் அர்ப்பணிப்பு என்பன இக்கொள்கை நடைமுறைப்படுத்தலில் தீர்க்கமான தாக்கத்தைச் செலுத்துவதை தடுத்துவிட முடியாது. இவ்வாறான உளப்பாங்குகள் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களையும் விஞ்சுகின்றன.

உளப்பாங்கு ரீதியான இந்த பின்னணியானது உத்தியோகத்தர்களினால் மாத்திரம் கடைப்பிடிக்கப்படுமொன்றல்ல. இது அரசியல்மயப்பட்டது.

ஆகவே, நடைமுறையிலுள்ள சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள் மற்றும் வழங்கப்படும் உறுதிமொழிகள் நடைமுறைப்படுத்தப்படாததன் பின்னணியில் உத்தியோகத்தர்கள் மாத்திரமே இருக்கின்றனர் எனக் கூறுவது பெருமளவில் தர்க்கரீதியானதல்ல.


சுருக்கமாகக் கூறுவதாயின், இந்தச் சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள் மற்றும் உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உளப்பாங்கு ரீதியான ஒரு மாற்றமும் இந்த நாட்டுக்குத் தேவைப்படுகிறது.

மேலும், ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கான வழிமுறைகளை வெற்றிகொள்வதற்காக ஏதேனும் ஒழுங்குமுறையான ஒரு கண்காணிப்பு வேலைத்திட்டம் நாட்டுக்கு விரைவாகத் தேவை என்பதையும் இது வெளிப்படுத்திநிற்கின்றது.



# யாழ் இளைஞர்களின் தோல்வியுற்ற முன்னுதாரணங்கள்

கலாநிதி தேவநேசன் நேசையா



**இலங்கையின் தமிழ் மொழி உரிமைகள் பற்றிய கட்டுரைத் தொடர் - பகுதி 1**

இலங்கையின் மொழி உரிமைகளைப் பற்றிய விவாதத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. இவ்வரலாற்றில் பல்வேறு கண்ணோட்டங்களில் பல ஆய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கீர்த்திமிகு முன்னாள் சிவில் சேவை உறுப்பினராகக் கடமையாற்றிய கலாநிதி தேவநேசன் நேசையா முன்வைக்கும் கருத்துக்கள் இங்கு வெளியிடப்படுகின்றன.

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அரசாங்க அதிபராகச் சேவையாற்றிய தேவநேசன் நேசையா இலங்கை நிர்வாகச் சேவையின் மூத்த அதிகாரியாகக் கடமையாற்றினார்.

1980களின் ஆரம்பத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய கலாநிதி தேவநேசன் பின்னர் சுற்றாடல் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

தற்போது பிரபல அறிஞராகவும், சிவில் சமூக செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகிறார். தமிழ் மொழி உரிமையைப் பற்றியே இக்கட்டுரையில் வலியுறுத்துகின்றார்.

> “ஒரேயொரு அரசகரும மொழியாக சிங்களத்திற்காக பிரச்சாரம் செய்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (மஹஜன எக்ஸத் பெரமுன என்ற பதத்திலான கூட்டணியொன்றின் அங்கம்) மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய சிங்களவர்களினால் வழிநடத்தப்பட்ட இரு பாரிய கட்சிகள் போட்டியிட்ட 1956 தேர்தல்கள் இனத்துவப் பிரிவினையை விரிவுபடுத்தின.”

1956இன் அரசகரும மொழிச் சட்டம் அமுலாக்கப்பட்டதன் பின்னர் சிங்கள மொழி உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, பிரதானமாக தமிழ்மொழி உரிமைகளைப் பற்றியும், குறைந்த அளவில் ஆங்கில மொழியின் உரிமைகளைப் பற்றியும் நான் சுருக்கமான வரலாற்றுத் தொகுப்புடன் எனது கட்டுரையை ஆரம்பிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக்காலம் முதல் இலங்கை சுதந்திரம் அடைந்த முதலாவது தசாப்தம் வரையும் ஆங்கிலமே அரசகரும மொழியாகத் திகழ்ந்தது. நிருவாகத்திலும், கல்வியிலும் தேசிய மொழிகளின் உபயோகத்திற்கான எழுச்சி யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸினால் (Jaffna Youth Congress) வழிநடத்தப்பட்டது. காலஞ்சென்ற ஹண்டி பேரின்பநாயகம் இவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்கினார். காந்தியின் நடவடிக்கைகளினால் கவரப்பட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் அனேகமாக இளம் பாடசாலை ஆசிரியர்களையும், சிரேஷ்ட மாணவர்களையும் உள்ளடங்கியிருந்தது, யாழ்ப்பாணத்திற்கு வெளியே சகல அரசியல் தலைவர்களுடனும் (கண்டிய மற்றும் கரையோரச் சிங்களவர்கள், சோனகர் மற்றும் மலாயர்கள், மலையக மற்றும் கிழக்குத் தமிழர்கள்), காந்தி, நேரு மற்றும் ராஜகோபாலாச்சாரியார் ஆகியோர் உட்பட மிகப் பெரிதும் மதிக்கப்பட்ட இந்தியத் தலைவர்களுடனும் மனப்பூர்வமான உறவைத் தாபித்திருந்தது. 1920களிலும், 1930களின் முற்பகுதியிலும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் உச்சநிலையில் இருந்தது. ஆனால், அதன் பின்னர் அது படிப்படியாக மங்கிப்போனது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் கொள்கைக்கு அமைவாக, கட்டாயமான மொழிகளாக சிங்களத்தையும், தமிழையும், ஆங்கிலத்தையும் யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணிப் பாடசாலைகள் கற்பித்தன. அவர்களுக்கு உடனடியாகவே சுதந்திரம் தேவைப்பட்ட காரணத்தினால், டொனமூர் சீர்திருத்தங்களை எதிர்த்ததுடன், டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் நடைபெற்ற 1931 அரச சட்ட சபைத் தேர்தல்களையும் பகிஷ்கரித்தனர். 1931இல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்தப் பகிஷ்கரிப்பு 100% வெற்றியை அளித்ததுடன், பகிஷ்கரிப்பினை அங்கீகரிக்காத தமிழ் தேசியவாதிகள் கூட (உதாரணம்: மன்னாரில் போட்டியிட்டு, தோல்வியடைந்த ஜி.ஜி. பொன்னம்பலம்) குடாநாட்டுக்கு வெளியே போட்டியிட்டார்கள். ஆனால், தொடர்ந்து பகிஷ்கரிப்பு வெளிப்படையாகவே தாக்குப்பிடிக்க முடியவில்லை என்பதுடன், 1936 அரச சட்ட சபைத் தேர்தல் நடைபெற்ற போது பகிஷ்கரிப்பு இடம்பெறவில்லை. துரதிஷ்டவசமாக, 1931இல் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸினால் அழைக்கப்பட்ட பகிஷ்கரிப்பு எதிரான விளைவுகளை ஏற்படுத்தியதுடன், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இளம் புத்திஜீவிகள் கற்பனாவாத உயர் இலட்சியங்களைப் பின்பற்றுபவர்கள் என உதாசீனம் செய்யப்பட்டார்கள். இது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸுக்கு மேலாக தமிழ் காங்கிரஸை ஆரம்பிப்பதற்கான உந்துசக்தியை வழங்கியதுடன், தனது ஆதிக்கத்தை ஜி.ஜி. பொன்னம்பலம் பேணக்கூடியதாகவும் இருந்தது. 1936 முதல் இரு தசாப்தங்களுக்கு தமிழ் அரசியலில் அவர் தனது ஆதிக்கத்தைச் செலுத்தினார். இக்காலத்தினுள் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸினால் கட்டியெழுப்பப்பட்ட இனரீதியான நல்லெண்ணம் படிப்படியாக சிதைவடைந்தது.

இதனிடையே அரசகரும மொழியாகவும், பாடசாலைகளில் போதனா மொழியாகவும் சிங்களத்தை மட்டுமே கொண்டுவருவதற்காக 1944இல் அரச சட்ட சபையில் தீர்மானமொன்றை ஜே.ஆர்.ஜயவர்தனா கொண்டுவந்தார். வாக்களிப்பிற்கு இது சமர்ப்பிக்கப்படுவதற்கு முன், சிங்களம் மட்டுமே என்பதற்குப் பதிலீடாக சிங்களமும், தமிழும் என திரு.வி.நல்லையாவினால் திருத்தமொன்று கொண்டு வரப்பட்டது. திருத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இது தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் மத்தியில் இனவாத விரோதத்தன்மையையும், பாதுகாப்பின்மை பற்றிய உணர்வையும் உருவாக்கியது. 1948 பாராளுமன்றத் தேர்தல்களிலும், மீண்டும் 1952 பாராளுமன்றத் தேர்தல்களிலும் வடக்கின் தேர்தல் தொகுதிகளில் அனேகமாக சகல ஆசனங்களிலும் தமிழ் காங்கிரஸ் வெற்றியீட்டியது. எனவே, இதன் பின்னர், எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் தலைமையிலான தமிழரசுக் கட்சியினால் தமிழ் தலைமைத்துவம் பொறுப்பேற்கப்பட்டதுடன், 1970களின் பிற்பகுதியில செல்வநாயகம் காலமாகும்

12ம் பக்கம் பார்க்க....

# கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழு அறிக்கையின் மொழி மற்றும் கலாசாரம் தொடர்பான பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைத் திட்டம்


கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள தேசிய நடவடிக்கைத் திட்டம் ஏற்கனவே பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அதன் கீழ் வரும் மொழி மற்றும் கலாசாரத் துறைக்கு ஏற்புடைய பரிந்துரைகளை செயற்படுத்தும் திட்டம் பின்வருமாறு:

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.245 –** 2020ஆம் ஆண்டளவில் ஓர் மும்மொழித் தேசத்திற்கான ஆசிரியர் பயிற்சி மற்றும் ஊழியர்களுக்காக ஒரு முன்னுரிமை அடிப்படையில் கிடைப்பதற்கு வரவுசெலவுத் திட்ட ஏற்பாட்டை மேற்கொள்ளுதல்.<br>**9.246, 247, 249 –** அனைத்து அரசாங்க அலுவலகங்களும் அனைத்துச் சந்தர்ப் பங்களிலும் தமிழ் பேசும் உத்தி யோகத்தர்களைக் கொண்டிருப்பதைக் கட்டாயமாக்குதல். மொழியின் அடிப் படையில் எந்தவொரு மாவட்டமோ அல்லது மாகாணமோ வகைப்படுத்தப் படல் கூடாது. பொலிஸ் நிலையங்கள் இரு மொழித் திறன் கொண்ட உத்தியோகத்தர்களை 24 மணி நேர அடிப்படையில் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு முறைப்பாட்டாளர் தனது வாக்குமூலத்தை அவர் விரும்பிய பாஷையில் பதிவு செய்யப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். ஓர் தற்காலிக முறைமையாக, நீண்ட காலக் கொள்கைகள் மற்றும் முறைமைகள் பயனுறப்படும் வரை மொழிபெயர்ப்புக்கான கணினி மென் பொருட்கள் பயன்படுத்தப்பட முடியும்.<br>**9.248 –** ஒவ்வொரு மாகாணத்திலும் மற்றும் கிளைகளிலும் ஓர் பயனுறுதியான அதிகாரங்களுடன் கூடிய ஒரு அதிகாரமே மொழிகள் ஆணைக்குழு என்பதை உறுதிப் படுத்துதல்.<br>**9.250** -மொழி தொடர்பான இடைக்காலப் பரிந்துரையை அமுல்படுத்தவும். பொலிஸ் நிலையங்களில் இருமொழித் திறன் கொண்ட ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தி யோகத்தர்களை உரைபெயர்ப்பாளர் களாக உபயோகிப்பதற்கு கொண் டிருத்தல். | 1. மொழிக் கொள்கையின் பயனுறுதியான அமுல்படுத்துதலை உறுதிப்படுத்துவதற்கு ஒரு நடவடிக்கைத் திட்டத்தை உருவாக்குதல்.<br>2. மொழிகள் ஆணைக்குழுவின் வகிபாகத்தை ஆராய்தல் மற்றும் வலுப்படுத்துவதற்கான பகுதிகளை இனங் காணுதல். நடவடிக்கைத் திட்டத்தில், எடுக்க வேண்டிய திருத்த நடைமுறைகளை உள்ளடக்கவும்.<br>3. “2020 ஆண்டளவில் மும்மொழிச் சமுதாயம் மீது ஜனாதிபதி செயலணிக்குழுவின்” பரிந்துரைகளை அமுல்படுத்துதல்.<br>4. அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பயனுறுதியானவையா மற்றும் கொள்கையுடன் இணக்கப்பாட்டைக் கொண்டுள்ளனவா என்பதை மதிப்பீடு செய்வதற்கு ஒரு கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் திட்டத்தை வடிவமைத்தல். | 1. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு<br>2. மும்மொழிச் சமுதாயம் மீது ஜனாதிபதி செயலணிக்குழு | மும்மொழி முன்னெடுப்பு அமுலபடுத்தலின் பயனுறுதியான கண்காணித்தல். | நடைபெற்று வருகின்றது |
| நீண்ட காலத் திட்டங்கள் இடப்படும் வரை தொடர்பாடலில் வசதியளிப்பதற்கு பொருத்தமானவாறு அரச அலுவல கங்களில் உரைபெயர்ப்பாளர்களை உபயோகித்தல். | 1) அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட மொழி உரிமைகள் கடைப்பிடிக்கப் படுவதைக் கண்காணித்தல்.<br>2) மொழி உரிமைகளின் கடைப்பிடித்தலை உறுதிப்படுத்துவதற்கு தேவையான மேலதிக பரிகார முறைமைகளை இனங் காணுதல். | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 1)கண்காணித்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டது.<br>2)மேலதிக பரிகார நடவடிக்கைகள் இனங் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. | 1) 12 மாதங்கள்<br>2) 24 மாதங்கள் |
| **9.251 –** ஒரு தகுதி அடிப்படையிலான அனுமதி முறைமையை அறிமுகப் படுத்தும் நோக்கில் ஒதுக்கீட்டுப் பங்கீட்டு முறையை (கோட்டா) பரிசீலிப்பதற்கு கல்வியில் நிபுணர்களின் ஒரு குழுவைத் தெரிவு செய்தல். (பல்கலைக் கழகங் களுக்கான அனுமதி?) | அனுமதிக்கான தகைமைகளை மேம்படுத்தும் ஏதேனும் மாற்றங்களை பரிந்துரைக்கும் நோக்கில் தற்போதைய அனுமதிக் கொள்கையை ஆராய்தல். | பல்கலைக் கழக மானியக் குழு/உயர் கல்வி அமைச்சு | நிபுணர்கள் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டது. | 12 மாதங்கள் |
| **9.252 –** நாட்டின் வேறுபட்ட பகுதிகளில் கிடைக்கின்ற கல்வி வசதிகளில் உள்ள சமத்துவமற்ற தன்மையை குறைத்து ஈற்றில் இல்லாதொழித்தல். | நாடு முழுவதிலுமாக பாடசாலைகளிலுள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கு “மகிந்த சிந்தனை” உடன் இணங்கியதாக தற்போதைய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல். | கல்வி அமைச்சு | பாடசாலைகளிலுள்ள கல்வி வசதிகளை தரமுயர்த்துதல். | 36 மாதங்கள் |
| **9.253, 254 –** வேறுபட்ட இன மற்றும் மதப் பின்னணிகளில் இருந்தான சிறுவர்களுக்கு சேவையாற்றும் கலவன் பாடசாலைகள் மற்றும் மாணவர்களுக்கு மத்தியில் கூடுதலான இடைத் தொடர்புகளை ஊக்குவிப்பதற்கான ஒரு செயற்பாட்டுக் கொள்கையை உருவாக் குதல் [உதாரணம்: பாடசாலைகளை இணைத்தல், மாணவர் பரிமாறல் திட்டங்கள், நல்லிணக்கச் சங்கங்கள், தேசிய இளைஞர் பேரவை பரிமாறல் நிகழ்ச்சித்திட்டங்கள்]. | 1. இனரீதியான கலவன் பாடசாலைகளை ஊக்குவிக்கும் ஒரு கொள்கையை உருவாக்குதல்.<br>2. சமூகங்களுக்கிடையிலான தொடர்புகளை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலைகள் உள்ளடக்கியிருப்பதை உறுதிசெய்தல். | கல்வி அமைச்சு | இனரீதியான கலவன் பாடசாலைகளை ஊக்குவிக்கும் ஒரு கொள்கை ஸ்தாபிக்கப்படல். | 24 மாதங்கள் |
| **9.257 –** அரச பல்கலைக் கழகங்கள் மூன்று மொழிகளிலும் அளிக்கப்படும் கற்கை நெறிகளின் ஒரு தெரிவுடன் இனரீதியாக கலப்புக் கொண்ட மாணவர் தொகைகளைக் கொண்டிருப்பதை உறுதி செய்தல். | தற்போதைய கொள்கை இந்தத் தேவைப்பாட்டை ஒரு பொருத்தமான வகையில் நிறைவேற்றுகிறது. எவ்வாறாயினும், தற்போதைய முறைமையை கவனத்தில் கொள்வதற்கு ஒரு நிபுணர்கள் குழாம் ஒன்றுகூட்டப்படலாம் என்பதுடன் மும்மொழிச் செயன்முறையை முன்னேற்றும் ஏதேனும் மாற்றங்களைப் பரிந்துரைக்கலாம். | பல்கலைக் கழக மானியக் குழு/உயர் கல்வி அமைச்சு | நிபுணர்கள் குழுவொன்றின் இனங் காணுதல். | 12 மாதங்கள் |

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.258 -** மாகாணங்கள் மற்றும் தேசிய மட்டங்களிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல். | தற்போது, தேசிய மட்டத்திலான போட்டிகள் நாடு முழுவதிலுமான பங்குபற்றுதலை உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், முன்னைய மோதல் பிரதேசங்களில் விளையாட்டுக்களை ஊக்கத்துடன் முன்னேற்றுவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட முடியும். | விளையாட்டுத் துறை அமைச்சு | அத்தகைய போட்டிகள் பல வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. | நடைபெற்று வருகின்றது |
| **9.261, 263 –** புலம்பெயர் சமூகத்தின் உபயோகப்படுத்தாதுள்ள ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைப் பிரேரிப்பதற்கு, ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார, பாதுகாப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தனியார்துறை மற்றும் கல்விமான்களை உள்ளடக்குகின்ற ஒரு பலதுறை சார்ந்த செயலணியை உருவாக்குதல் மற்றும் 'விரோதப்போக்கைக் காண்பிக்கும் புலம் பெயர் குழுக்களின்' கரிசனைகளுக்கு பதிலிறுப்பதற்கும், மற்றும் அவர்களை நல்லிணக்கச் செயன்முறைகளில் ஈடுபடும் அரசாங்கம் மற்றும் அக்கறை கொண்டோர்களுடன் ஆக்க பூர்வமான முறையில் சம்பந்தப்படுத்துதல். | 1. இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்கள் மூலமாக புலம்பெயர் சமூகங்களின் உபயோகப்படுத்தாதுள்ள ஆற்றல்களை பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.<br>2. வெளிநாட்டுத் தூதரகங்களூடாக நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல். | வெளி விவகார அமைச்சு | 1. நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப் பட்டது.<br>2. நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப் பட்டது. | 3 மாதங்கள்<br>3 மாதங்கள் |
| **9.270 –** நம்பிக்கை இடைக் குழுக்களுடனான கலந்துரையாடலில், இன அல்லது மத ரீதியான பதட்டங்கள் அல்லது பிணக்குகள் மோதல் நிலைகளுக்கு இட்டுச் செல்லாதிருப்பதை உறுதிசெய்வதற்கு ஒரு முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் முன்கூட்டியே தணிக்கும் ஒரு பொறிமுறையின் ஸ்தாபித்தலிற்கு வசதியளிக்கவும். | 1. பொலிஸ் மற்றும் சமூகமயப்படுத்தப்படும் பொலிஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் சிவில் பாதுகாப்பு குழு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்துதலை தொடர்தல்.<br>2. சமூக அபிவிருத்திக் குழுக்களிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களது செயற்றிறன் அபிவிருத்தியைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களின் அமுல்படுத்துதல். | பொலிஸ் திணைக்களம் | அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் அமுல்படுத்துதல் மற்றும் அத்தகைய அமுல்படுத்துதலிற்கு பரந்த விளம்பரப்படுத்துதல். | 6 மாதங்கள் |
| **9.274, 275 –** மொழி மற்றும் கலாச்சார உறவுகளுக்கு கூடுதலான விழிப் புணர்வை உருவாக்குதல். தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலுள்ள முக்கியமான இலக்கிய ஆக்கங்களை முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்த்து அவற்றை பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே பரப்புரை செய்தல்.<br>சமூகங்களுக்கிடையலான பொதுத் தன்மைகள், பரஸ்பர புரிந்துணர்தல்களை சுட்டிக்காட்டுகின்ற திரைப்பட, தொலைக்காட்சி மற்றும் மேடை நாடக உருவாக்கங்களை ஊக்குவித்தல். | 1. மொழிபெயர்ப்பு மற்றும் இலக்கிய ஆக்கங்கள் மூலமானவை உட்பட கலாச்சார உறவின் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான முறைமைகளை ஆராய்ந்து அறிமுகப்படுத்துதல்.<br>2. சமூகங்களுக்கிடையே பொதுத்தன்மைகள் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வுகளை சுட்டிக் காட்டுவதற்கு கலாச்சாரப் பிரிவை ஈடுபடுத்தல். | 1. கலாச்சார விவகார அமைச்சு<br>2. கலாச்சார விவகார அமைச்சு | சமூகங்களுக்கிடையில் கலாச்சார உறவு மற்றும் பொதுத்தன்மைகள் என்பவற்றை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள். | 12 மாதங்கள் |
| **9.277 -** இரண்டு மொழிகளில் தேசிய கீதம் பாடி வருகின்ற தற்போதைய நடைமுறையைப் பேணுதல். | அரச சேவைகள் ஆணைக்குழுவில், தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகளில் இந்தப் பரிந்துரையை ஆராய்ந்து அமுல்படுத்துதல். | ஜனாதிபதி செயலகம் | அரச சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுல்படுத்துதல். | 1 வருடம் |
| **9.283 -** இனம், மதம் மற்றும் இலக்கியம் தொடர்பாக *'பகைமை உணர்வுகளை ஏற்படுத்தும் உரைகளைக்'* கையாள் வதற்கு அச்சுறுத்தும் வகையிலான சட்டங்களை இயற்றி கடுமையாக அமுல்படுத்துதல். | 1. பகைமை உணர்வுகளை ஏற்படுத்தும் உரைகளைக் கையாள்வதற்கு தண்டனைக் கோவைச் சட்டவாக்கத்தின் போதுமான தன்மையை ஆராய்தல்.<br>2. அவசியமாயின், சட்டச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தல். | நீதி அமைச்சு | பாராளுமன்றத்துக்கு வரைபுச் சட்டவாக்கத்தின் சமர்ப்பித்தல். | 1 வருடம் |
| **9.285 –** துன்பமான மோதல்களில் உயிரிழந்த அனைத்துப் பாதிக்கப்பட்ட வர்களுக்குமான ஒருமைப்பாடு மற்றும் பச்சாதாபத்தை தெரிவிக்கும் வகையில் தேசிய தினத்தில் தனியானதொரு நிகழ்வை ஏற்படுத்தியும் மற்றும் நாட்டில் மீண்டும் இத்தகைய இரத்தம் சிந்துதல்கள் ஒருபோதும் ஏற்படாது இருப்பதை உறுதி செய்வதற்கான எங்களது கூட்டுப் பற்றுறுதியையும் உறுதியளித்தல். | ஒருவரையொருவர் அழிக்கின்ற மோதல்களுக்கு இட்டுச் சென்ற கடந்த கால நிகழ்வுகள் மீளவும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு வன்முறையின்மை மற்றும் சமாதானம் என்பவற்றுக்கான எங்களது ஒரு கூட்டுப் பற்றுறுதியுடன் ஒரே தேசம் மற்றும் ஒரே மக்களாக ஒற்றுமையை வெளிப்படுத்தும் தற்போதைய நடைமுறையைத் தொடருதல். | 1. ஜனாதிபதி செயலகம்<br>2. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு<br>3. அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் | அனைத்து மக்களிடையேயும் நிலையான சமாதானம் மற்றும் ஒற்றுமை | --- |

# இனங்களுக்கிடையிலான நல்லுறவை பாடசாலையிலிருந்தே ஊட்டி வளர்த்தல் வேண்டும்.

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் தொடக்க விழாவில் கூறுகிறார்.



தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் 2012 ஜூலை 16 முதல் 22 வரை அமுலாக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தைப் பிரகடனப்படுத்தி அலறி மாளிகையில் இடம்பெற்ற தொடக்க விழாவில் ஜனாதிபதி ஆற்றிய உரையிலிருந்து தயாரிக்கப்பட்ட கட்டுரை

இனங்களுக்கிடையிலான நல்லுறவானது சிறு பாராயத்திலிருந்தே ஊட்டி வளர்க்கப்பட வேண்டியதொன்றாகும். ஆனால், இதற்குப் பதிலாக நாங்கள் சிங்களம், தமிழ், முஸ்லீம் என பாடசாலைகளை வகைப்படுத்தி எமது பிள்ளைகளுக்கு சிறுவயது முதலே பிரிந்து வாழ்வதற்கு கற்பிக்கின்றோம். இனங்களுக்கிடையிலான சமத்துவத்தை நாம் பாடசாலையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். இந்நல்லுறவை பிள்ளைப் பாராயத்தில் கட்டியெழுப்புவதற்கான சிறந்த இடமாகத் திகழ்வது பாடசாலையே என சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்துள்ளார்.

சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை அறிவிக்குமுகமாக அலரி மாளிகையில் இடம்பெற்ற வைபவத்தின்போதே சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணாமற்போதல், இயற்கை அனர்த்தங்கள், நெருக்கடிகள் மற்றும் பல்வேறுபட்ட காரணங்களுக்காக சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் உள்ள எமது சகோதர மக்களை மீண்டும் சமூகத்தில் இணைத்துக்கொள்ளுதல், அவர்கள் இழந்துள்ள உரிமைகள், வரப்பிரசாதங்கள் மற்றும் சமூக அந்தஸ்தினை மீண்டும் வழங்குதல் மற்றும் இதில் முழு நாட்டினதும் மக்களினதும் கவனத்தை ஈர்த்தல் என்பன இந்த சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்,

"நாம் எமது தாய் நாட்டை ஒற்றை மையப்படுத்தி பாரிய வெற்றியைப் பெற்று தற்போது மூன்று வருடங்கள் கடந்துள்ளன. இந்த வெற்றிவாகையைப் பாதுகாப்பதானது இந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டது போன்றே சிரமமான ஒரு காரியம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதமோ அல்லது அதையொத்தச் செயற்பாடுகளோ உருவாகாதிருக்க வகைசெய்வதன் மூலம் மாத்திரமே இந்த வெற்றியைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். ஆகவே, நாங்கள் இந்த வெற்றிவாகையைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதற்கே தயாராகின்றோம் என்பதை நான் இங்கு கூற விரும்புகிறேன்"

இந்த நாட்டில் பயங்கரவாதம் நிலவிய காலகட்டத்தில் இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துமுகமாக அரசியலமைப்பு அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு தாபிக்கப்பட்டது.

ஆகவே, நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சை மாற்றியமைத்து சமூக ஒருமைப்பாட்டு அமைச்சைக் கட்டியெழுப்பி, இப்பாரிய பொறுப்பை அந்த அமைச்சுக்கு ஒப்படைத்துள்ளதுடன் பொருத்தமான ஒரு அமைச்சரிடம் இதனைக் கையளித்திருக்கிறோம். இனங்கள் மத்தியிலும் இந்த நாட்டு பிரஜைகள் மத்தியிலும் சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதே தற்போது இந்த அமைச்சின் பொறுப்பாகும். பரந்த உள்ளம் கொண்ட ஓர் உன்னதத் தலைவனை இந்த நாடு உருவாக்க வேண்டும். இது மிகவும் உன்னதமாக ஒரு கைங்கரியமென்பதை நீங்களும் உணர்ந்திருப்பீர்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களுக்கிடையில் மோதல்களும் பல்வேறுபட்ட வேற்றுமைகளும் நிலவி வந்தன. ஆனால், அவற்றுக்கான தீர்வுகள் அக்காலகட்டத்திலேயே எட்டப்பட்டன. எமது புத்தபெருமான் அவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மிருகங்களிடையே பாதங்களற்றவை இரு பாதங்களைக் கொண்டவை, நான்கு பாதங்களைக் கொண்டவை என இனங்கள் காணப்பட்டபோதும் மனிதர்களிடையே இவ்வாறானதொரு வேற்றுமை இல்லையெனவும் இத்தகைய உயர்வு தாழ்வுகள் இனங்களிடையே இல்லையெனவும் அவர் போதித்தார். இப்போதனைகள் உலகத்துக்கும் எமது நாட்டுக்கும் எந்தளவு முக்கியமானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது தான் அனைத்து சமயத் தலைவர்களினதும் பொதுவான போதனையாக உள்ளது. ஆகவே, இச்சமயத் தலைவர்களின் போதனையை மார்க்கத்தை நாம் ஏற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது. அதனைப் பின்பற்றவும் வேண்டும் என்பதே எமது நம்பிக்கையாகும். பின்பற்றுவதுதான் சிரமமான காரியம்.

சிலர் சனாதிபதித் தேர்தலின்போது மிகத் தவறான விதத்தில் சாதிப் பிரச்சனைகளை கிளப்பியதோடு அதேயாண்டில் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலின்போதும் இந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிய ஒருசிலர் பாராளுமன்றத்துக்கு வந்த பின்னர் தொடர்ந்தும் இது பற்றி வாதிடும் நிலைக்கும் ஆளாயினர்.

அக்காலகட்டத்தில் டி.எம். ராஜபக்ஷ, டி.ஏ, ராஜபக்ஷ ஆகியோர் இந்த சாதிப் பிரச்சனைக்கு எதிராக எவ்வாறு போராடினார்கள் என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. எனது தந்தை டி.ஏ. ராஜபக்ஷ சாதிப் பிரச்சினையால் நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கு மேல்சட்டை அணிவதற்கு அனுமதிக்கயளிக்க வேண்டுமென்ற பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைத்தார். எனது தந்தை இப்பிரேரணையை இவ்வாறு பாராளுமன்றத்தில் முன்வைத்தபோது, இதனை வழிமொழிந்தவர் ஒரு தமிழர்.

இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கும் அப்பால் எமக்குள்ளே தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் இருப்பது இதன் மூலம் வெளிப்படுகிறது. நாம் நமக்குள்ளே இருக்கின்ற பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள ஓர் இனமாக ஒன்றினைவோம். நாம் ஒன்றிணைந்து எமக்குள் இருக்கும் தவறுகளையும் பிரச்சினைகளையும் அத்தோடு இனங்களுக்கிடையில் காணப்படும் குறுகிய மனப்பான்மை ஆகியவற்றை தோற்கடிக்க வேண்டும்.

நான் 1970 இல் இலங்கையின் வயதில் குறைந்த உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு வருகைதருகையில், ஒவ்வொரு தொழிலையும் அடிப்படையாகக் கொண்டமைந்த சாதிப் பெயர்களினால் அழைக்கப்பட்ட கிராமங்கள் இருந்தன. அத்தருணத்தில் இக்கிராமங்களின் பெயர்களை மாற்றுவதற்கும் அடுத்து, சாதிப் பெயர்கள் மற்றும் குடும்பப் பெயர்களை மாற்றுவதற்கும் பாராளுமன்றத்தில் அன்று தனியார் பிரேரணை கொண்டுவரப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதிலிருந்து எமது அரசாங்கத்துக்கு மக்களிடையே சமத்துவத்தை கட்டியெழுப்புவதிலான தேவைப்பாடு இதன் மூலம் வெளிப்படுகிறது. அன்று தொடக்கம் எமக்குள் காணப்பட்ட இத்தேவைப்பாடானது இன்றும் எம்மத்தியில் நிலவுகிறது.

எமது பல்கலைக்கழகங்களில் எம்மவர்களைத் தவிர வேறு எவருக்கும் பிரவேசிக்க முடியாது எனும் குறுகிய வட்டத்திற்குள் நாம் உள்ளடக்கப்படுகிறோம். இவ்வாறு செயற்படுவதால் தேசிய இணக்கப்பாட்டை உருவாக்கிவிட முடியாது. நாம் மதங்களை மதிக்க வேண்டும். அது மிகவும் முக்கியமானது. எமது சமூகத்தை எடுத்து நோக்கினால் நாம் இனரீதியில் மாத்திரமன்றி ஏனைய விதங்களிலும் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றோம்.

ஏனைய மதத்தவர்கள், இனத்தவர்களுடன் போன்றே அங்கவீனமுற்றோருடனும் ஒன்றாக வாழ்வதற்கும் நாம் சிறு வயது முதலே எம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களும் எம்மைப் போன்றவர்களே என்பதை உணர்ந்து, அவர்களுடன் இணைந்து வாழும் பழக்கத்தை நாம் சிறு வயது முதலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதே உளப்பாங்கு ரீதியான மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

எனக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. கிராமத்தை எள்ளி நகையாடுபவர்களும் நிந்திப்பவர்களும் உள்ள சமூகத்தில் செயலாற்றி மஹிந்த சிந்தனையை வெளியிட்டபோது

13ம் பக்கம் பார்க்க...

## சிங்கள - தமிழ் மொழியில் இணயத்திற்குச்செல்ல பல புதிய எழுத்துரு வகைகள்.

(2012-05-13 சிலுமின)

கணினி மற்றும் இணையத்தில் சிங்கள, தமிழ் மொழியில் கடமையாற்றுவதை இலகுபடுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட ஏராளமான கணினி மென்பொருள்களினதும் உள்ளடக்கங்களினதும் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் கொழும்பு ஜய்க் ஹில்ரன் ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப முகவராண்மையின் தலைமையில் இக்கணினி மென்பொருள் மற்றும் உள்ளடக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சிங்கள மொழி எண்உருக்கள் யுனிகோட் நியமங்களுக்கமைய வடிவமைக்கப்பட்டு இதன்போது வெளியிடப்பட்டதுடன், 1134:(2011) எனும் இலங்கை நியமங்களுக்கமைய இது வடிவமைக்கப்பட்டிருந்தது.

கவர்ச்சித்தோற்றத்துடன் கூடிய கலைவடிவில் வடிவமைக்கப்பட்ட சிங்கள எழுத்துரு வகைகள் ஆறும், தமிழ் எழுத்துரு வகைகள் ஆறும் இதன்போது வெளியிடப்பட்டன.

கணினியைப் பயன்படுத்தி பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் இணையத்தள வடிவமைப்புக்களை மேற்கொள்கையில் இக்கருமங்களை கலைத்திறன்மிக்கதாகவும், படைப்பாற்றல் கொண்டதாகவும் மேற்கொள்ளக்கூடிய விதத்தில் இந்த எழுத்துரு வகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வைபவத்தில் உரையாற்றிய பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்க, மிகவும் விசித்திரமான ஒரு மொழியான சிங்கள மொழியானது தகவல், தொடர்பாடல், தொழில்நுட்பம் காரணமாக மென்மேலும் மெருகூட்டப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

## சிங்கள தமிழ் எழுத்துருக்களுக்கான புதிய செந்தரச் சான்றிதழ்

பெத்தும் விக்ரமரத்ன / அச்சலா தர்மசேன

(2012 -05- 07 லக்பிம)

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப முகவராண்மையானது (ICTA) இலங்கை நியமங்கள் நிறுவனத்துடன் இணைந்து சிங்கள தமிழ் எழுத்துக்களுக்கான புதிய நியமச் சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சிங்கள தமிழ் மொழிகள் மூலம் தகவல் தொழிநுட்ப பிரிவை பலப்படுத்தும் நோக்கில் இவ்வாறு புதிய நியமச் சான்றிதழைக் கொண்ட 12 புதிய சிங்கள, தமிழ் எழுத்துரு வடிவங்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன.

கணினி மென்பொருள்களை அபிவிருத்தி செய்து, சிங்கள தமிழ் மொழிகளில் பிரயோகிக்கக்கூடிய சர்வதேச யுனிகோட் சாவிப்பலகையையும் ICTA அறிமுகம் செய்து வைத்தது. இந்தப் புதிய முறையின் மூலம் உலகில் எந்தவொரு இடத்திலிருந்தும் ஒரே ஆவணத்தை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கணினி ஆவண செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

## 76 பிரதேச செயலகங்களுக்கு இருமொழிக் கருமபீடங்கள்

அநுர பாலசூரிய

(2012-06-02 திவயின)

சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் ஒன்றாக வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் இருமொழி உதவிக் கருமபீடங்களை அமைப்பதற்கு தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணாயக்காரவின் ஆலோசனைக்கேற்ப குறித்த இருமொழி உதவிக் கருமபீடம் அமைக்கப்படவுள்ளது.

தாம் உரையாடும் மொழியில் (சிங்களம் அல்லது தமிழ்) தமது அலுவல்களை மேற்கொள்வதை இலகுபடுத்துவது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

சிங்கள, தமிழ் மொழிகளைப் பேசுகின்ற மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களைச் சார்ந்த 76 பிரதேச செயலகங்களில் குறித்த உதவிக் கருமபீடங்கள் அமைக்கப்படுவதாக தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு குறிப்பிடுகிறது. மாவனல்லை, வெள்ளவத்தை, பேறுவளை, வத்தளை ஆகிய பிரதேசங்கள் இருமொழிப் பிரதேசங்களாக பெயரிடப்படவுள்ளன. முதற்கட்டமாக 46 பிரதேச செயலகங்களில் இம்மொழிக் கருமபீடங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், 14 பிரதேச செயலகங்களில் ஏற்கனவே இது நடைமுறையிலுள்ளதெனவும் அமைச்சு தெரிவிக்கிறது.

குறித்த பிரதேசங்கள் எதிர்காலத்தில் இருமொழி ஆளுகைப் பிரதேசங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




## ஒரு இலட்சத்துக்கும் அதிகமான அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**- அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார**

(2012-05-22 தினமின)

அநுர பிரேமலால்

யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப் பகுதியில் ஒரு இலட்சத்துக்கும் மேலான அரசாங்க ஊழியர்களுக்கு சிங்கள, தமிழ் மொழிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக தேசிய மொழி ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார சுட்டிக் காட்டினார்.

இத்துடன் நின்றுவிடாமல் இந்நாட்டின் அனைத்து இனங்களினதும் மொழி உரிமையை பாதுகாக்கும் நோக்கில் அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பல வேலைத்திட்டங்கள் இடம் பெற்றுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் (21) தேசிய மொழி ஒருமைப்பாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார இக்கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமது அமைச்சின் கீழ் உள்ள அரச கருமமொழிகள் திணைக்களம், தேசிய மொழிக் கல்வி பயிற்சி நிறுவனம் மற்றும் அரச கரும மொழிகள் ஆணைக்குழு எனும் மூன்று நிறுவனங்களும் இப்பாரிய செயற் பொறுப்பினை ஏற்று நிறைவேற்றுவதாகக் குறிப்பிட்டார்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் தமிழ், சிங்கள மொழிப் பயிற்சியை அளிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், மொழிச் சங்கங்களை அமைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தற்போது ஆயிரம் மொழிச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 478க்கும் அதிகமான மொழிச் சங்கங்கள் இயங்கிவருவதாகவும், இவ்வருட இறுதிக்கு முன்னர், எஞ்சிய சங்கங்கள் ஆரம்பிக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

குறித்த பிரதேசங்களில் காணப்படும் இனவிகிதாசாரத்திற்கமைய இருமொழிப் பிரதேசங்களைப் பெயரிடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது 30 இருமொழிப் பிரதேசங்கள் பெயரிடப்பட்டுள்ளதுடன், மேலும் 43 பெயரிடப்படவுள்ளதாக நாணாயக்கார தெரிவித்தார். வட-கிழக்கு பிரதேசங்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் பத்திரங்களான, தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட தேவையான சான்றிதழ்களை வழங்குவதற்கான நடமாடும் சேவைகளை வடக்கிலும் கிழக்கிலும் நடத்தி, பல இலட்சக்கணக்கான மக்களுக்கு உதவி புரிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

யுத்த நிலைமைகள் காரணமாக இந்தியாவுக்குச் சென்றுள்ள மக்கள் அங்கு பிரசவிக்கும் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன், அரச கரும மொழிக் கொள்கைகளை மீறும் இடங்களை சுற்றிவளைத்து, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்குமைய செயற்படாத நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய இயலுமான ஒரு முறைமையினை ஏற்படுத்துவதாகவும், இவ்வனைத்து விடயங்கள் தொடர்பாகவும் பின்னாய்வு முறைமையொன்றை ஏற்படுத்துவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் அரச கரும மொழி ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஆர். ரணவக்க, தேசிய மொழிப் பயிற்சி கல்வி நிறுவனத்தின் தலைவர் சீதாவிதானாச்சி மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ரத்னா ரணசிங்க ஆகியோரும் பங்கேற்றனர்.



# மும்மொழியில் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவது கட்டா...

அரசாங்கம் அ...

(அ.கனகராஜ்)

அரச மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் ஊடாக கடன் பெற்றுக்கொள்வதற்காக விநியோகிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் மும்மொழிகளிலும் விநியோகிக்கப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடன் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் ஆங்கில மொழில் மட்டுமே வழங்கப்படுவதனால் மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம்கொடுத்து வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்தே மும்மொழிகளிலும் விண்ணப்பிக்கவேண்டும் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விசேடமாக கிராமிய மக்கள் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கடன் பெறுகையில் இன்றேல் பொருட்களை கொள்வனவு செய்துகொள்ளும் போது பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம்கொடுக்கின்றனர். இங்கு ஒப்பந்தங்கள் மற்றும் பிணை வழங்குவதற்கான நிபந்தனைகள் ஆங்கில மொழி...

...யிலேயே இருக்கின்றன. அ... கவனம்செலுத்தாலு கை... டியுள்ளது.

அவர்கள் கடன் பெறுகையில் ... குத்தகைக்கு பெற்றுக்கொள்... றான ஒப்பந்தங்களில் ... டும். அவையாவும் தங்களுக்... மொழியில் வெறும் ஆ... மே எழுதப்பட்டிருப்பத... முறைப்பாடுகள் கிடை...

தேசிய மொழி கொ... சகல இனங்களில் ... விண்ணப்பங்கள் தயா... டும். அது சட்டத்... தனால் விண்ணப்பங்களை ... லும் விநியோ... கவேண்டும்.

விண்ணப்பதில் ... உறுப்புரை... ஏதாவது ...

# வடக்கில் 80% பொலிஸ் முறைப்பாடுகள் தமிழ் மொழியில் இடம்பெறுவதாகக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும்.

தினக்குரல் 13-05-2012

வடக்கில் பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழிப் பிரயோகம் எண்பது சதவீதமாக உள்ளதாகக் கூறப்படுவது அப்பாட்டமான பொய்யெனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திரு எஸ். ஸ்ரீதரன் தெரிவிக்கிறார். பொலிஸ் நிலையங்களின் முறைப்பாட்டுப் பதிவேட்டில் தமிழ் மொழியில் பதிவுகள் இடம்பெற்றிருப்பின் அதனைக் காட்டுமாறும் அவர் சவால் விடுக்கிறார்.

வடக்கு மாகாணத்தின் பிரதம பொலிஸ் அத்தியட்சகர், வடக்கில் பொலிஸ் நிலையங்களில் எண்பது சதவீத தமிழ் மொழிப் பிரயோகம் உள்ளதாகக் கூறியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வடக்கில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் தமிழில் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகுமெனவும், இதனை நேரில் சுட்டிக்காட்ட தாம் தயாராகவிருப்பதாகவும் குறிப்பிட்டார். முறைப்பாடுகள் சிங்களத்தில் மாத்திரமே எழுதப்படுகின்றன. விபத்து அல்லது ஏதேனும் சம்பவங்கள் குறித்து சிங்களத்தில் மாத்திரமே பதிவுசெய்யப்பட்டு பின்னர் அது தமிழுக்கு மாற்றப்படுகின்றது.

தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளபோதும், தமிழ் மொழியில் முறைப்பாடுகளை எழுதுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. தமிழ் உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். இத்தகைய நிலைமையில், எண்பது சதவீத தமிழ் மொழிப் பிரயோகம் உள்ளதெனக் கூறுவது அப்பாட்டமான பொய்யாகும். தமிழ் மொழியில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதனைக் காட்டுமாறும் அவர் சவால் விடுக்கிறார்.

ஏற்கெனவே மன்னாருக்கு ஒரு சிங்கள அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டார். தற்போது வவுனியாவுக்கும் ஒரு சிங்கள அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். எண்பது சதவீத தமிழ் மொழிப் பிரயோகம் உள்ளதெனக் கூறிக்கொண்டு, இவ்வாறான நியமனங்களைச் செய்வதன் மூலம் எவ்வாறு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதென அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இத்தகைய ஒரு சூழ்நிலைமையிலேயே தேசிய பிரச்சினைக்கு தீர்வினைக் காணுவதற்காக அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை அமைக்கிறது. அரசாங்கம் நல்லிணக்கம் குறித்து ஆர்வம் காட்டுவதாயின், முதற்கண் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண வேண்டுமென அவர் தெரிவித்தார்.

# தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் முதலமைச்சர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

தமிழ் மொழியைப் பாதுகாப்பதாக வாக்குறுதி

வீரகேசரி 07-04-2012
பதுளை

ஊவா மாகாண சபை அலுவல்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது தவறாகும். இதற்காக இச்சபையில் நான் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றேன். இனிவரும் காலங்களில் இத்தகைய தவறுகள் இடம்பெறமாட்டாதென ஊவா மாகாண முதலமைச்சர் சசிந்ர ராஜபக்ஷ தெரிவித்தார். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊவா மாகாண சபை அமர்வில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் கே.வேலாயுதம் ஊவா மாகாண சபையில் தமிழ் மொழி புர்ககணிக்கப்படுவதாகவும், ஊவாவின் வசந்தம் பற்றிய அழைப்பிதழ் தமிழில் தயாரிக்கப்படவில்லையெனவும் கருத்துத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சசிந்ர ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார் நடந்த தவறுக்கு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கிறேன். எதிர்காலத்தல் இவ்வாறான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்விதம் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதற்கு அனுமதிக்கமாட்டேன். தமிழ் மொழிப் பிரயோகத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவும், விழா அழைப்பிதழை தமிழ் மொழியில் வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் ஊவாவின் வசந்த தொடர்பான அழைப்பிதழ்கள் தமிழில் இடம்பெறாமை தொடர்பில் வருந்துகிறேன் என அவர் தெரிவித்தார். திரு. வேலாயுதம் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், எமது முதலமைச்சர் பொதுமன்னிப்புக் கோரத் தேவையில்லை. இது குறித்து நான் கவலையடைகின்றேன். இனிவரும் காலங்களில் அனைத்துவித எழுத்தாவணங்களும் தமிழ் மொழியில் வெளியிடப்படுமாயின் அது பயனுள்ளதாக இருக்கும். முதலமைச்சரின் துரித நடவடிக்கைக்கு எனது பாராட்டுக்கள் எனத் தெரிவித்தார்.

# நல்லிணக்க ஆணைக்குழுவிலுள்ள மொழி தொடர்பான பரிந்துரைகளை அரசு உடன் அமுல்படுத்த வேண்டும் !

மொழி உரிமையை அரசியல்வாதிகளே மீறுகின்றனர் - லயனல் குருகே

சுடர் ஒளி 01-05-2012
(கே. பாரதிராஜா)

மனிதாபிமான உணர்வுகளுடன் பிணைந்திருக்கின்ற மொழி உரிமைகள் மற்றும் மொழிக் கொள்கைகள் தொடர்பில் அரசு அசிரத்தையுடன் செயற்படக்கூடாது. மொழிச் சுதந்திரத்தை அந்தந்தச் சமூகங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் விதந்துரைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலத்திலும், தற்போதும் பாதுகாப்புச் செலவுகளுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யும் அரசு, மனிதாபிமான உணர்வுகளுடன் பிணைந்துள்ள மொழிக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏன் வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லையெனத் தெரியவில்லை என சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் இணைப்பாளர் லயனல் குருகே தெரிவித்தார்.

தேசிய நூலகச் சேவை கேட்போர் கூடத்தில் இலங்கையின் மொழி உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகக் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

1988ஆம் ஆண்டு இலங்கையில் தமிழ்மொழி தேசிய மொழியாக உள்வாங்கப்பட்டது. அக்காலப்பகுதியில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அதனை நடைமுறைப்படுத்துவதில் அன்றிலிருந்து இன்றுவரையுள்ள ஆட்சியாளர்கள் அசமந்தமாகவே செயற்படுகின்றனர்.

தேசிய மொழிச் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசு சரியான திட்டமிட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். ஏனெனில், மொழிகளின் சுதந்திரத்தின் பின்னணியிலேயே ஒரு சமூகத்தின் கலை, கலாசாரம், பண்பாடு முதலான அம்சங்கள் தங்கியுள்ளன.

தற்போது நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களே மொழி உரிமைகளை மீறும் வகையில் செயற்படுகின்றனர். இவர்கள் இவ்வாறு செயற்படுவதனால் குறிப்பிட்ட சமூகங்களுக்கிடையிலான உறவுகளில் விரிசல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே, அரச அதிகாரிகள் இது தொடர்பில் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு சமூகத்தினரதும் மொழி உரிமைகள் மற்றும் மொழிக் கொள்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

இதுவரையில் இலங்கையின் பல மாவட்டங்களிலும் எமது செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். சிங்கள, தமிழ் மொழிகள் நமது நாட்டில் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தமிழ்மொழி மூலமான அரச கரும நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

எனவே, அரசு இதனைக் கவனத்தில் கொண்டு நாட்டிலுள்ள ஏனைய மொழிபேசும் சிறுபான்மையினருக்கும் அவர்களது மொழிச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு சமூகத்தினரது மொழி உரிமைகள் மற்றும் மொழிக்கொள்கைகள் ஒருவரால் மீறப்படும்பொழுது அவர்கள் அரச மொழிகள் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு ஒம்புட்ஸ்மன் மற்றும் உயர் நீதிமன்றில் முறைப்பாடு செய்யலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# சவால்களை எதிர்கொள்ளும் நினைவுகளின் சுவடு

- அமைச்சர் டிவ் குணசேகர



**அரச கரும மொழி குறித்த விடயப் பரப்பினை ஆராயும்போது, அத்துடன் பின்னிப் பிணைந்துள்ள பிரச்சினைகளைத் திர்ப்பதற்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் குறித்தும் கவனம் செலுத்துவதும் பயன்மிக்கது.**

**தற்போது சிரேஷ்ட அமைச்சராக பணியாற்றும் டிவ் குணசேகர முன்னாள் அரசியலமைப்பு விவகார, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்தபோது, இது தொடர்பில தாம் பெற்ற அனுபவங்களை தெளிவுபடுத்தி ஆற்றிய உரையின் சில பகுதிகளை இக்கட்டுரை தாங்கி வருகிறது.**

**அரசியலமைப்பு விவகார, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுப் பதவியை வகித்த காலகட்டத்தல் தாம் முகம்கொடுத்த பல்வேறுபட்ட அனுபவங்கள் மற்றும் சிக்கல்கள் குறித்தும், அவற்றைத் தீர்ப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். சட்டம் மற்றும் சமூகப் பொறுப்பினால் தமிழ் மொழியை அரசகரும மொழியாகப் பலப்படுத்துவோம் எனும் தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே டிவ் குணசேகர தமது அனுபவங்களை இவ்வாறு பகிர்ந்து கொண்டார். இலங்கையின் மொழி உரிமைகள், தமிழ் மொழியை அரச கரும்மொழியாக பயனுறச்செய்தல் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.**

**தற்கால மற்றும் எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்கு கடந்தகால அனுபவங்களும் உதவியாக அமையும்.**

> **“அரச கரும மொழிகள் சட்டத்தினால் தமிழ் மொழி ஓர் அரச கரும மொழியாக இனம் காணப்பட்டு, இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஓர் அரசகரும மொழியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளபோதும், அரச கரும மொழிகள் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையைக் காணக்கூடியதாக உள்ளது.”**

நாட்டில் தற்போது உருவாகியுள்ள சிக்கல்களுக்கான அடிப்படைக் காரணமாகும் அரச கரும மொழிகள் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையாகும்.

அரச கரும மொழிகள் விடயத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் கடந்த இரண்டு வருடமாக நான் நிறைவேற்ற எதிர்பாரத்த பணிகள் தொடர்பில் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தேசிய பிரச்சினையில் இருப்பு கொண்டிருப்பது மொழிப் பிரச்சினை அல்ல. இது அரசியலுடன் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையாகும்.

அரச கரும மொழிகள் சட்டத்தினால் தமிழ் மொழி ஓர் அரச கரும மொழியாக இனம் காணப்பட்டு, இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஓர் அரசகரும மொழியாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளபோதும், அரச கரும மொழிகள் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இதற்கமைய சனாதிபதி அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட எனது முதலாவது அமைச்சரவைப் பத்திரமானது அரசகரும மொழிகள் சட்டதின் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமைந்திருந்தது.

இதன் பிரகாரம், அரச துறையில் அரசகரும மொழிகள் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிக்கையிடுவதற்காக என்னையும் கௌரவ அமைச்சர்களான சரத் அமுனுகம (அப்போதைய பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்) மற்றும் ஜனக பண்டார தென்னகோனையும் (உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்) உள்ளடக்கிய ஓர் அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலும் செயலற்றி இடம்பெற வேண்டிய திருத்தங்களைச் செய்வதற்காக நிதி திட்டமிடல், அரச நிருவாக, அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கிய உத்தியோகபூர்வ குழுவொன்றும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்விரு குழுக்களினதும் அறிக்கைகளையும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் நிபந்தனைப் பத்திரங்களின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொண்டு, அரசாங்க சேவையில் இருமொழியம் தேவையென்பதைச் சுட்டிக்காட்டி அமைச்சரவை அங்கிகாரத்துகென நான் முன்வைத்த சட்டமூலத்திற்கு 2006ஆம் ஆண்டில் அங்கீகாரம் கிடைத்தது.

இதற்கமைய பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

- இரண்டாம் மொழியில் தேர்ச்சியடையும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ரூ.15,000, ரூ.20,000, மற்றும் ரூ.25,000 என்ற அடிப்டையில் மூன்று படிநிலைகளுக்கு ஏற்புடையதாகும் வகையில் ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் கொடுப்பனவு
- மேலதிக சம்பள ஏற்றம்
- அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் ஐந்து வருட காலப்பகுதியினுள் இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

அரச சேவையை வினைத்திறன்மிக்கதாக இருமொழியமாக்க வேண்டுமாயின், தற்போது கடமையிலுள்ள சுமார் 60,000 அரச ஊழியர்களும் உரிய முறையில் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். எவ்வாறேனும், ஆசிரியர் பற்றாக் குறையானது பாடசாலைகளில் போன்றே, ஏனைய மொழிப் பயிற்சிகளை மேற்கொள்ளும் பாடசாலைகளிலும் பாரியளவில் உணரப்படுகிறது. மேலும், ஆசிரியர்களின் கற்பிப்புத் திறனையும் வளர்த்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் செயற்படுவதற்கு 2007ஆம் ஆண்டு 26ஆம் இலக்க சட்டத்தினால் தேசிய கல்விப் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டது.

13வது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது, இது தொடர்பான சவால்கள் மற்றும் இதனை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் முன்னர் ஏன் வெற்றிபெறவில்லை என்பது தொடர்பில் எனக்கு தெளிவான புரிதல் இருந்தது.

எனவே, அரசாங்கத் தரப்பு இது தொடர்பில் காட்டுகின்ற அரசியல் ரீதியான விருப்பமின்மை முதலாவது காரணமாகவும் தமிழ் மொழியை அரச கரும மொழியாக் கருதி செயற்படக் கூடிய விதத்திலான அரசியல் தலைமைத்துவமொன்று இன்மை இரண்டாவது காரணமாகவும் அரச கரும மொழிகள் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காட்டும் தயக்கம் மூன்றாவது காரணமாகவும் காணப்படுகிறது. நான்காவதாக கருதப்படுவது மொழியியல் ரீதியான சிறுபான்மை மீதான கவனத்தில் சிவில் சமூகம் காட்டும் கவனயீனமாகும்.

13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்புக்கு பல்வேறுபட்ட பிரதிபலிப்புகள் கிடைத்தன. எவ்வாறாயினும் சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின்

பெரும்பான்மையினர் அளித்த பிரதிபலிப்பு சாதகமானதாக அமைந்திருந்தது.. எனவே, எனக்கு அரசியல் ரீதியாகத் தேவையான ஒத்துழைப்பைப் பெற முடிந்தது.

ஆகவே, அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அரசாங்க ஊழியர்களுக்கு மாவட்டரீதியில் செயலமர்வுகளையும், கலந்தாய்வுகளையும் நடத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்து வைத்தேன்.

மாவட்டரீதியில் சகல அமைச்சுக்களிலும் விழிப்பூட்டல் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.. இதில் எனக்கு அனைத்து மதத் தலைவர்களினதும் ஆசீர்வாதம் கிடைக்கப்பெற்றது.

நான் அமைச்சரவையில் அடிப்படைத் தீர்மானங்கள் இரண்டை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தேன். அவையாவன,

01. 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படும் வகையில் அரச சேவையில் ஆட்சேர்க்கப்படுவர்களுக்கு இரண்டாவது அரச கரும மொழியைக் கட்டாயமாக்குதல்.
02. முந்திய ஊழியர்களுககு ஊக்குவிப்பு கொடுப்பனவினை வழங்குதல்.

அரச சேவை பிரதான மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அதாவது முகாமைத்துவ நடுத்தர மற்றும் கீழ் மட்டம் என இவை அறியப்படுகின்றன. முதலாவது தேர்ச்சிகாண் பரீட்சை 2008 ஏப்பிரல் மாதமளவில் நடத்தப்பட்டதுடன், இதில் 5000 க்கும் அதிகமான விண்ணப்பதாரர்கள் தமிழ் மொழியில் தோன்றினார்கள். வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து சுமார் 1700 விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழியிலும் தோன்றினார்கள்.

அரசாங்க ஊழியர்களுக்கு மும்மொழித் தேர்ச்சியை வழங்குவதற்காக வதிவிட மொழிப் பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்தும் நிலையமொன்று அகலவத்தையில் அமைக்கப்பட்டுள்ளது.

16வது திருத்தத்துக்கமைய 29 மேலதிக மாவட்ட செயலாளர் பிரிவுகள் மும்மொழிப் பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. மேலும் 29 பிரிவுகள் விரைவில் வர்த்தமானியில் அறிவிக்கப்படவுள்ளன. தேசிய ரீதியிலான சனத்தொகை விகிதாசாரத்தைக் கவனத்தில் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ள இருமொழிப் பிரதேசங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை மாவட்டம் தவிர ஏனைய சிறுபான்மை மாவட்டங்களில் அமைந்துள்ள இருமொழி பிரதேசங்களில் முழுமையான மொழி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல பாடநெறிகளை நடத்துவதற்கு உயர் கல்வி அமைச்சு இணங்கியுள்ளது. இதில் மொழிபெயர்ப்பு பாடநெறிகளும் உள்ளடங்கியுள்ளன.

இதற்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் பல்வகை தொழில்நுட்ப தொலைக்கல்வி முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் பெரும்பான்மையானோரின் தேவைகள் பூர்த்திசெய்யப்படுமென நம்பப்படுகின்றது.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள கீழ்க் காணும் புதிய நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான வரவேற்புக் கிடைத்துள்ளது.

- சிங்கள மொழி மூலப் பாடசாலைகளுக்கு தமிழ் மொழியை ஒரு பாடமாக அறிமுகம் செய்தல்.
- தெற்கில் தமிழ் மொழியைப் போதிக்கும் நிறுவனங்களை ஆரம்பித்தல்.
- தனியார் துறையில் கணினி பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுதல்.
- களனி, பேராதனைப் பல்கலைக்கழகங்களிலும் திறந்த பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழிப் பாடநெறிகள்
- மல்வத்து அஸ்கிரிய பீடங்களின் பிரிவெனா உட்பட 59 பிரிவெனாக்களில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகிறது.

தமிழ்மொழி பேசும் மக்களுக்கு சேவையாற்றுவதற்காக தமிழினத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களை சகல நிறுவனங்களுக்கும் இணைப்பது தொடர்பில் நான் அமைச்சரவை அங்கீகாரத்தை எதிர்பார்த்திருக்கிறேன்.

இது ஒரு பாரிய சவால் என்பது எனக்குத் தெரியும். இதில் உள்ள நடைமுறைசார்ந்த சிக்கல்கள் எண்ணிலடங்காதவையாகும். இது 1957 இல் அல்லது 1987 இல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த ஒரு விடயமாகும். ஆனால், 2007ஆம் ஆண்டிலேயே நாங்கள் இவ்விடயத்தில் இடையீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.
.

1833 இல் கோல்புறூக் கமரன் மறுசீரமைப்பில், ஆங்கில மொழி இலங்கையின் அரச கரும மொழியாக அறிமுகம் செய்யப்பட்டதையடுத்து, இலங்கையரான சிவில் ஊழியரொருவரை உருவாக்குவதற்கு எமக்கு 50 வருடங்கள் தேவைப்பட்டன.

ஆங்கில மொழி அறிமுகம் செய்யப்பட்டு 175 வருடங்கள் கடந்துள்ளது. ஆனால், சனத்தொகையில் பத்து சதவீதத்தினரே ஆங்கில மொழியில் தேர்ச்சி கண்டுள்ளனர். சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டமையோ அல்லது பெரும்பான்மையானோரின் மொழியாகக் காணப்படுவதோ இதற்கான நேரடிக் காரணமல்ல. கடந்த கால அறிக்கைகளை நோக்குமிடத்து, சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்படல் 4 படிமுறைகளுக்கு ஏற்ப 1956 முதல் 1970 வரையில் 14 வருடங்களாக நிகழ்ந்துள்ளது.

நாட்டின் தற்போதைய செல்நெறியை நோக்குமிடத்து இதுவரை காலமும் அந்நியப்படுத்தி நோக்கப்பட்ட ஒரு பிரச்சனைக்கு சிறியளவிலேனும் தீர்வு காணக் கிடைத்தமையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**மொழி உரிமை பற்றி சமூகத்திற்கு அறிவூட்டுவதற்காக வெளியிடப்படும் ஓர் பத்திரம் இலக்கம்–01**

# மனிதனும் மொழியும் உரிமைகளும்

பல்வேறு இனங்களுக்கிடையில் மனிதத்துவம் சமமானது. ஆனால் ,மொழிகள் வேறுபடலாம். மனிதத்துவம் அவரவர் மொழிகளினூடே வெளிப்படுத்தப்படுகிறது.

எமது மனிதத்துவத்தின் பொதுத்தன்மையும், மொழிகளின் வேறுபாட்டையும் நாம் புரிந்துகொண்டால், எமக்கு மற்றுமோர் மனிதத்தன்மை இருத்தல் வேண்டும். அது, ஏனைய இனங்களின் மொழியை நாம் கௌரவிப்பதாகும். அதற்குக் காரணம் , மற்றவருடைய மனிதப் பண்பை அவரது மொழியிலிருந்து வேறுபடுத்த முடியாது. பல மொழிகள் பாவனையில் உள்ள ஒரு நாட்டில், அவ்வாறு மதிப்பளிப்பக்கப்படுவது மற்றவருடைய உரிமையாகும். இத்தகைய சூழமைவிலேயே சமாதானம் நிலவும். மேற்படி உரிமைகளை இழக்கும் போது அந்நபர் தான் ஒரு மனிதனாகக் கவனிக்கப்படவில்லை என உணர்கிறார். அப்போது, அவருடைய மனம் நோகின்றது. கோபம், பகைமையாக மாறுகிறது. ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டம் ,இவ்வாறாக தமது மொழியின் காரணமாக வேதனைப்படுவார்களேயாயின், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெடி மருந்திடம் ஒப்படைக்கப்படுகிறது. இவ்வாறாகவே 30 ஆண்டுகளாக நாம் யுத்தத்தை உருவாக்கினோம்.

தற்போது யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது என்பது உண்மை. ஆனால் எவருமே வெற்றிபெறவில்லை. தொடர்ந்தும் இப்பாரபட்சம் நிலவுமானால் வெடிமருந்து சேகரித்தலும் கூட்டாகவே இடம்பெறும். நிர்வாக அல்லது நிறைவேற்று நடவடிக்கைகளை அமுலாக்கப்படாமையால், வெடிமருந்துகளாக மாறும் நிலை நீண்டகாலமாக இலங்கையில் நிலவி வந்துள்ளது.

1. மொழிப்பாவனை எவ்வாறு உரிமையாகிறது?
2. இவ்வுரிமை எவ்வாறு மீறப்படுகிறது ?

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)**
24/2, 28வது ஒழுங்கை,
ப்ஃளவர் வீதி, கொழும்பு - 07
+94(11) 2565304/5/6
www.cpalanka.org, info@cpalanka.org

# யாழ் இளைஞர்களின் தோல்வியுற்ற முன்னுதாரணங்கள்

4ம் பக்கத் தொடர்ச்சி

வரை இரு தசாப்தங்களுக்கு மேலாக அவரது தலைமை நீடித்து நிலைத்தது.

ஆனால், 1977 வரை ஒவ்வொரு தேர்தலிலும் பிரிவினைக்கு எதிராக தமிழரசுக் கட்சி ஆக்ரோஷமாகவும், வெற்றிகரமாகவும் பிரச்சாரம் செய்தது. செல்வநாயகத்தின் காலத்தின் போது, வடக்கிலும், கிழக்கிலும் உள்ள முஸ்லிம்களின் ஆதரவை தமிழரசுக் கட்சி அனுபவித்தது. பிராந்தியத்தின் முஸ்லிம் பிரதிநிதிகள் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர். இதேவேளை, வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே தளத்தைக் கொண்டிருந்த முஸ்லிம் தலைவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு வாக்களித்தனர். ஆனால், இதில் செனேட்டர் எ.எம்.எ.அஸீஸ் (ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்) விதிவிலக்காகச் செயல்பட்டார். இப்பிரச்சனையைத் தொடர்ந்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறியதுடன், சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராகவும் வாக்களித்தார்.

ஒரேயொரு அரசகரும மொழியாக சிங்களத்திற்காக பிரச்சாரம் செய்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (மஹஜன எக்ஸத் பெரமுன என்ற பதத்திலான கூட்டணியொன்றின் அங்கம்) மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய சிங்களவர்களினால் வழிநடத்தப்பட்ட இரு பாரிய கட்சிகள் போட்டியிட்ட 1956 தேர்தல்கள் இனத்துவப் பிரிவினையை விரிவுபடுத்தின. அரசகரும மொழிகளாக சிங்களத்திற்கும், தமிழுக்கும் மார்க்ஸிய லங்கா சம சமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் பிரச்சாரம் செய்ததுடன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்கனவே கைச்சாத்திட்ட போட்டியற்ற ஒப்பந்தத்தினால், வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான ஆசனங்களை அவை பெற்றுக்கொண்டன. ஆனால், வடக்கில் அல்லது கிழக்கில் சிறிதளவு தாக்கத்தையே இக் கட்சிகள் கொண்டிருந்தன. வடக்கில் கம்யூனிஸ்ட் கட்சி ஓர் ஆசனத்தை வெற்றியீட்டியதுடன், நாடு பூராவும் பாராளுமன்றத்தில் இரண்டாவது பாரிய கட்சியாக லங்கா சம சமாஜக் கட்சி விளங்கியது. ஒன்றில் இடதுசாரிக் கட்சிகளோ அல்லது தமிழ்க் கட்சிகளோ பயனுறுதிவாய்ந்த அரசியல் கூட்டணியொன்றை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. 1940களில் மலையகத் தமிழர்களையும், இடதுசாரிகளைச்சாராத தாராள வாத கருத்தியலைக் கொண்ட சிங்களவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை ஒன்றிணைக்கும் இத்தகையதொரு கூட்டணி அமைக்கப்பட்டிருந்தால், அவை 1947 தேர்தல்களில் வெற்றியீட்டியிருக்கும். அதே சமயம், எமது வரலாற்றின் மார்க்கத்தை மாற்றியமைத்து, மலையகத் தமிழர்களின் குடியுரிமை, மற்றும் வாக்களிக்கும் உரிமைகள் இழக்கப்படுவதையும், அரசகரும மொழியொன்றாகத் தமிழை விலக்கி வைப்பதையும், தொடர்ச்சியாக இடம்பெற்ற கலவரங்களையும், இனசுத்திகரிப்புகளையும் அத்துடன் இவற்றைப் பின்தொடர்ந்த சிவில் யுத்தத்தையும் தவிர்த்திருக்கலாம். இதனிடையே, இனவாதப் பிளவு வருடங்கள் மறைந்தோட விரிவடைந்தது. 1956 தேர்தல்களில் வடக்கிலும், கிழக்கிலும் தமிரசுக் கட்சி வெற்றியீட்டியதுடன், நாட்டின் எஞ்சிய பகுதிகளில் மஹஜன எக்ஸத் பெரமுன வெற்றியீட்டியது. சுதந்திரத்திற்கு முன்னரேயே ஆரம்பித்த இனத்துவப் பிளவுகள் இறுக்கமடைந்ததுடன், நேரத்திற்கு நேரம் இறுக்கம் குறைந்தது ஆனால், தற்போது உறுதியாகத் தாபிக்கப்பட்டு, மீண்டும் இறுக்கமடைகின்றது.

தமது அரசியல் கட்சிகளின் (ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி) தூண்டல்களுக்கு அமைவாக சிங்களம் மட்டும் சட்டமூலத்திற்கு வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே உள்ள தொகுதிகளைப் பிரதிநிதிப்படுத்தும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். இதன் விளைவொன்றாகவே வடக்கிலும், கிழக்கிலும் உள்ள முஸ்லிம்களின் அக்கறைகளைப் பாதுகாப்பதற்காக எம்.எச்.எம்.அஷ்ரப்பின் தலைமையின் கீழ் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோன்றியது. இக் கட்சி வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே சில தேர்தல் தொகுதிகளில் வெற்றியீட்டியதுடன், இலங்கை முஸ்லீம்களின் முன்னணிக் கட்சியாகத் தோற்றம் பெற்றது. கடுந்துயரமான விபத்தொன்றில் அவரது அகால மரணம் வரை தமிழரசுக் கட்சியுடன் அஷ்ரப்பின் உறவு தொடர்ந்துமே நன்றாக விளங்கியது.

1981 குடிசனக் கணக்கெடுப்பில் (கடைசியாக இடம்பெற்ற நாடு பூராவிலுமான குடிசனக் கணக்கெடுப்பு) தமிழ் பேசும் சனசமூகங்கள் (இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், சோனகர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள்) அச் சமயத்தில் சனத்தொகையின் 30%ஐ அடக்கியிருந்ததுடன், சிங்களவர்கள் (கண்டிய மற்றும் கரையோரச்சிங்களவர்) 69% ஆகவும், ஏனையோர் ஒரு சதவீதத்தை விடக் குறைவாகவும் விளங்கினர். 1981 முதல் புலம் பெயர்வின் காரணமாக குறிப்பிடத்தக்களவில் இனத்துவ விகிதாசாரங்கள் மாற்றமடைந்துள்ளன (தமிழர்கள் மத்தியில் இது ஈடில்லாத விதத்தில் உயர்வாகும்). மொழி உபயோகத்தைப் பொறுத்தளவில், தமிழ் பேசுபவர்களின் ஒரு சிறிய பகுதியினர், விசேடமாக முஸ்லிம்கள் சிங்கள மொழி அறிவை ஈட்டியுள்ளனர். எனினும், இலங்கையர்கள் தொடர்ந்துமே ஒரேயொரு மொழியைத் தெரிந்தவர்களாகவே இருக்கின்றனர். அரசகரும மொழியாகச் சிங்களம் முன்வைக்கப்பட்ட தன்மையும், அதனுடன் இணைந்திருந்ததும், பின் விளைவிலானதுமான வன்முறையும் தமிழர்கள் மத்தியில் சிங்கள மொழியின் அறிவு பரவுவதைத் தடுத்துள்ளன. இரு மொழிகளையும் மற்றும் மும்மொழிகளையும் பரப்புவதற்கு இலங்கையின் கல்வி முறைமையும் உகந்ததாக இருக்கவில்லை. இது இந்தியாவில் உள்ள சூழ்நிலைக்கு முற்றிலுமே மறுதலையானதாகும். அங்கு படிப்பறிவு மட்டங்கள் மிகக் குறைவாக இருந்த போதிலும், பலமொழிகளை மேம் படுத்துவதற்கு கல்வி முறைமை உந்துசக்தியாக விளங்குவதுடன், இது அந் நாட்டில் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதில் பாரிய காரணியொன்றாகவும் இருந்து வருகிறது.

பெருமளவு மொழிசார்ந்த மாநிலங்கள் சமஷ்டியாக விளங்குவதே இந்தியாவில் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இங்கு தமது மொழிகளைப் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு மாநிலத்தினுள் எண்ணிக்கை ரீதியில் உள்ளூரில் குறிப்பிடத்தக்க மொழிசார்ந்த சிறுபான்மையினர்களுக்கான ஏற்பாட்டுடன் அம் மாநிலத்தின் இந்திய தேசிய மொழிகள் ஒவ்வொன்றுமே அதிகாரத்துடன் ஆட்சி செய்யப்படுகின்றது. உதாரணமாக, தமிழ் நாடு மாநிலத்தில் அரசகரும மொழி தமிழாகும். ஆனால், தமது சம்பந்தப்பட்ட மொழிகளைப் பயன்படுத்துவதற்கு தமிழ் நாட்டின் எல்லைகளினுள் மலையாளம், கன்னடம் மற்றும் தெலுங்கு ஆகியவற்றைப் பேசுபவர்கள் உள்ள பகுதிகளில் ஏற்பாடுள்ளது. மறுபுறத்தில், கேரளா, கா்னாடகா மற்றும் ஆந்திரா ஆகியவற்றின் எல்லைகளினுள் தமிழ் பேசுபவர்கள் உள்ள குறிப்பிடத்தக்க இடங்களில் அவர்கள் கல்வியிலும், மாநிலத்துடன் தொடர்புகொள்வதிலும் தமிழைப் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது. இவை யாவுமே தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கின்றன. மறுதலையாக, இலங்கை தொடர்ந்துமே தனிமொழியாக அதிகாரம் செலுத்தப்படுவதுடன், தேசிய சிறுபான்மையினருக்கோ (பெரிதுமே தமிழ் பேசுபவர்கள்) அல்லது பிராந்திய சிறுபான்மையினருக்கோ (சிங்களம் பேசுபவர்களோ அல்லது தமிழ் பேசுபவர்களோ) போதியளவு ஏற்பாட்டினை நிருவாகம் செய்திருக்கவில்லை. இதன் விளைவாக, முன்னரைவிட இலங்கைத் தேசம் தற்போது இனத்துவரீதியில் அதிகளவு முறிவடைந்துள்ளது.

தற்போது அனேகமாக சிங்களம் பேசுபவர்களின் விகிதாசாரம் 75%க்கு மேலாகவும், தமிழ் பேசுபவர்களின் விகிதாசாரம் 25%ஐ விட குறைவாகவும் இருக்கும். மறுபுறத்தில், மொழி உபயோகம் தொடர்பிலான சட்டங்கள் மாற்றமடைந்துள்ளன. 1956இல் ஒரேயொரு அரசகரும மொழியாக சிங்களம் கொண்டுவரப்பட்டதுடன், இது 1972 மற்றும் 1978 அரசியலமைப்பில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. அரசகரும மொழியாக தமிழையும் (அரசகரும மொழியாக சிங்களத்தின் வரலாற்றுரீதியிலான அந்தஸ்தை மதிப்பு குறைக்காமல்), இணைப்பு மொழியாக ஆங்கிலத்தையும் சிறிதளவு திரிபுபடுத்தப்பட்ட பதத்தில் 1987இன் பதின்மூன்றாவது திருத்தம் அறிமுகப்படுத்தியது. அரசியலமைப்பின் சம்பந்தப்பட்ட உறுப்புரை 18 தற்போது பின்வருமாறு அர்த்தப்படுகின்றது:

18 (1) இலங்கையின் அரசகரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும்.

(2) தமிழும் அரசகரும மொழியொன்றாதல் வேண்டும்.

(3) ஆங்கிலம் இணைப்பு மொழியாதல் வேண்டும்.

(4) பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

1988இன் 16ஆவது திருத்தத்தின் சீரிய பண்பினால், இலங்கை முழுவதும் நிருவாக மொழியொன்றாக தமிழ் உள்ளடக்கப்பட்டதுடன், அதிகளவிலான விபரத்துடன் அதன் புதிய அந்தஸ்து உச்சரிக்கப்பட்டதுடன், அது மீண்டும் திரிபுபடுத்தப்பட்ட பதமாகவே விளங்கியது. தமிழும் தற்போது அரசகரும, நிருவாக மற்றும் நீதிமன்ற மொழியாகும். ஆங்கிலம் இணைப்பு மொழியாகும் என்பதுடன், நிருவாகத்தில் குறைந்த அளவொன்றுக்கே அது பயன்படுத்தப்படுகிறது. அரசியலமைப்பின் திருத்தப்பட்ட உறுப்புரைகள் 22 (1), (2) மற்றும் (3) ஆகியன தற்போது பின்வருமாறு அர்த்தப்படுகின்றன:

# இனங்களுக்கிடையிலான நல்லுறவை

7ம் பக்கத் தொடர்ச்சி

இதனை மெத முலன சிந்தனை என்றே கூறினார்கள். மேத முலனை என்பது அப்பாவிக் கிராமத்தவர்கள் வாழும் ஒரு கிராமம். மேத முலனை சிந்தனை எனக் கூறி ஏளனம் செய்வது கிராமத்துக்கே. கறுவாத்தோட்டத்தில் உள்ளவர்களே இவ்வாறு கூறி கிராமத்தை நகைப்புப் பொருளாக்கி இருக்கிறார்கள்.

இதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்ட நாம், அங்கவீனர்கள், வறியவர்கள், கிராமத்தவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் தம் வாழ்வில் உயர்வடைவதற்கான கதவுகளைத் திறந்து வைத்துள்ளோம். கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப வசதிகளை கிராமத்துக்கு கொண்டு சென்றோம். கிராமத்துக்கு முடியாது என்ற நிலைப்பாட்டை நாம் அபிவிருத்தியின் கதவுகளைத் திறந்ததன்மூலம் தகர்ந்தெறிந்துள்ளோம். அங்கவீனர்களுக்கு விளையாட்டு, கலை, கல்வித் துறைகளில் முன்னேறுவதற்கும், விளையாட்டு விழா, கலை விழா முதல் பல்கலைக்கழக கல்வி வரையிலான வழிகளையும் திறந்து வைத்துள்ளோம்.

இன்று நாம் முல்லைத் தீவு மாவட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிப்பதற்கான விஷேட வாய்ப்புகளை வழங்கியிருக்கிறோம். அது மாத்திரமன்றி, பயங்கரவாதத்தினால் நிர்க்கதிக்குள்ளான வட-கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுவதற்காக, இப்பிரதேசங்களைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் தமிழ் மொழியில் பரீட்சை நடத்தி, நிர்வாகிகள், கணக்காளர்கள் மற்றும் விவசாய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. நிருவாக சேவைக்கான பரீட்சை காலக்கிரமத்தில் நடைபெறவிருக்கிறது. கணக்காளர் பரீட்சைக்கான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. விவசாய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கும் தயாராக உள்ளோம்.

இன்று முன்வைக்கப்படும் LLRC அறிக்கை வெளிவருவதற்கு முன்னரே, நாம் இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம். LLRC பரிந்துரைகளில் அவை முன்மொழியப்பட்டிருக்கவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். ஆகவே, இவற்றை நடைமுறைப்படுத்துகையில் சமூகத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களவர்கள் தமிழர்களின் கொண்டாட்டங்களிலும் தமிழர்கள் சிங்களவர்களின் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்கிறார்கள். இதற்கு நாங்கள் வழியமைத்திருக்கிறோம். பௌத்த சமயக் கொண்டாட்டங்களை மாத்திரமன்றி, சகல இனத்தவர்களினதும் சமயக் கொண்டாட்டங்களை நாம் நடத்துகின்றோம். இதன்மூலம் சமூகத்துக்கு இவ்வுணர்வுகளை எடுத்துச் செல்கிறோம். இந்நாட்டு மக்களுக்கிடையிலான ஒற்றுமை, சமாதானத்தினால் நாம் பயன்பெற வேண்டும். இதன் மூலம் நாம் பிறந்த எமது தாய் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவதே நாம் அடையும் வெற்றியாகும்.

இதன்போது தமிழ் மொழியில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அவர்கள்,

“சகோதார தமிழ் மொழியில் நான் உரையாற்றுவதற்கு விரும்புகிறேன். இன்று இங்கு வருகை தந்திருக்கும் உங்களனைவரையும் நான் அன்புடன் வரவேற்கின்றேன். இந்நாட்டு மக்கள் அனைவரும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் உரையாட வேண்டும். இத்தகைய ஓர் அபிமானம் மிக்க சமூகம் எமக்கு மிகவும் தேவையாக உள்ளது. இன, மத பேதங்களின்றி எம் அனைவருக்கும் ஒன்றுறிணைந்து வாழ முடியும். எனக்குத் தேவையாக இருப்பது இதுதான். இதுதான் எனது எதிர்கால எதிர்பார்ப்பாகவும் உள்ளது” எனத் தெரிவித்தார்.

தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார, அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்கிரமசிங்க மற்றும் ஜேர்மன் தூதரகத்தின் பிரதித் தூதுவர் மரியா ஜடேக் ஆகியோரும் இதன்போது கருத்துத் தெரிவித்தார்கள்.

# பாலம் அமைப்போம்

சமீபத்தில் இடம்பெற்ற சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்நத சினேகபூர்வ சந்திப்பில் வடக்கு கிழக்கு பிரதேசம் உட்பட்ட நாட்டின் சகல பாங்களிலிருந்தும் சுமார் ஐம்பது பேர் வரையிலான சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் எழுத்தாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். இச்சந்திப்பின்போது சிங்கள மற்றும் தமிழ் மொழிக்கு நூல்களை மொழிபெயர்க்கும் வேலைத்திட்டத்தை முறைப்படுத்தல், மலையக இலக்கியவாதிகளுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புதல், இன நல்லுறவை மையநோக்கமாகக் கொண்ட படைப்புகளை ஊக்குவித்தல் அத்துடன் ஒன்றியத்தின் வெளியீடாக “தீப” (தீபம்) சஞ்சிகையை இடையறாது வெளியிடுதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. இந்த சினேகபூர்வ சந்திப்பிற்கு உயிரூட்டிய எழுத்தாளர் தெனகம சிறிவர்தனவின் கவிவரிகள் அனைவரது கவனத்தையும் வென்றது. கவிவரிகளை மேமன் கவி அதேநேரத்தில் உணர்வு ததும்ப தமிழில் படைத்தார். உழைக்கும் மக்களிடையே வடக்கு கிழக்கு பேதம் இல்லையெனக் கூறும் கவிஞர் வாழ்வுக்கான ஒரே ஆசுவாசம் சமாதானம் என்பதை வெளிக்கொண்டு வந்தார். எழுத்தாளர் தெனகம சிறிவர்தன மற்றும் மேமன் பாடிய கவிவரிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

## பாலம்

**நான் இருப்பதோ தெற்கில்**
**நீயே, தொலைதூர வடக்கில்**
**எமது ஊர்கள் இம்மண்ணில்**
**வேற்றும் கண்டாயே அதுதன்னில்**

**பகலவனும் ஒன்றே திங்களும் ஒன்றே**
**வயலில் பாடுபட்டு அரிவி வெட்டிடுவோம்**
**துன்பம் பட்டிடுவோம் ஒன்றாய்**
**துயரம் கண்டிடுவோம்.**

**வடபுலத்திலும் தென்புலத்திலும்**
**பட்டதாரிகள் கண்டோம்**
**வேலையில்லாத் திண்டாட்டத்தில்**
**யுவன் யுவதிகள் கண்டோம்**

**கையோங்கியோரின் கொடூரம் கண்டோம்**
**கடைகெட்டவனின் செயல் கண்டோம்**
**வடக்கும் தெற்கும்**
**படும் துயரம் ஒன்றெனக் கண்டோம்**

**கண்ணீர் ஒன்றே**
**காயங்கள் ஒன்றே**
**இத்தரணியில் நாம்**
**அனைவரும் ஒன்றே**

**பாசம் உள்ள இடத்தில்**
**பகை வளர்த்து விட்டோம்**
**அந்தப் பகையால்**
**எமது தாய்மண் அழியக் கண்டோம்**

**தீப் பிளம்புகளை அணைத்திடுவோம்**
**சகோதரப் பிணைப்பை வளர்த்திடுவோம்**
**இரு புலத்தையும் இணைத்திடுவோம்**
**முறியா உறவு பாலம் அமைத்திடுவோம்.**

தெனகம சிறிவர்தன

# உங்கள் மொழி உரிமைக்காக!

பொலிஸ் நிலையமொன்றில் உங்கள் மொழியில் முறைப்பாடொன்றை அங்குள்ள உத்தியோகத்தர் பதிவுசெய்யும் இயலுமையை கொண்டிராத சந்தர்ப்பத்தில் அதனை உங்கள் மொழியில் பதிவு செய்து பதிவு செய்த தாளினை (சிங்களம் அல்லது தமிழ்) முறைப்பாட்டுப் புத்தகத்தில் ஒட்டுமாறு கோரமுடியும்.

தமது மொழி உரிமை மீறப்பட்டுள்ளதாகக் கருதும் எந்தவொருவரும் நிவாரணம் கோரி அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு இய்யலாம்.

முறைப்பாடுகளுக்கும் விசாரணைகளுக்குமான நேரடி தொலைபேசி இலக்கம்

**0112878687**

அரச கரும மொழிகள் ஆணைக்குழு,
தலைவர் / செயலாளர்
நான்காவது மாடி, பாஷா மந்திரய
341/7, கோட்டே வீதி, ராஜகிரிய.
மின்னஞ்கல் : olc@sltnet.lk

## எட்டு மொழிகளில் இலங்கை பற்றிய தகவல்கள்

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை நாடு பற்றிய தகவல்களை எட்டு மொழிகளில் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான கணினி முறைமையொன்றை சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ள இடங்களில் நிறுவும் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த முறைமை ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளதோடு எதிர் காலத்தில் சுற்றுலா விடுதிகள் உள்ளிட்ட இடங்களிலும் இதனை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு அறிக்கை ஊடகங்களுக்கான பரிந்துரைகள்

கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான தேசிய திட்டத்தின் ஊடகச் சுதந்திரத்திற்கும் தகவல்களைப் பெறுவதற்கும் ஏற்புடைய பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைத் திட்டம்

| பரிந்துரை | நடவடிக்கை | பிரதான பொறுப்புடைய அலுவலகம் | முக்கிய நிறைவேற்றுகைக் குறிக்காட்டி (KPI) | கால வரையறை |
|---|---|---|---|---|
| **9.115அ-இ** ஊடகவியலாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான தொல்லைப் படுத்தல்கள் மற்றும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு அனைத்து விதமான நடவடிக்கைகளை எடுத்தல்.<br><br>அத்தகைய சம்பவங்களின் புலன்விசாரணை, வழக்குத் தொடருதல் மற்றும் முடிவுறுத்துதல் என்பவற்றுக்கு முன்னுரிமை அளித்தல். கடந்த காலத்திலான அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளை முறையாக புலன்விசாரணை செய்தல். | 1. ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.<br><br>(அ குறைதீர்க்கும் பொறிமுறைகளைக் கைக்காள்ளுதல்-<br>பொலிஸிற்கு முறைப்பாடு செய்தல், உயர் நீதிமன்றத்திற்கு அடிப்படை உரிமை விண்ணப்பங்கள், பத்திரிகைப் பேரவைக்கு முறைப்பாடு செய்தல் (பரந்தபட்டவொரு நியாயாதிக்கம் மற்றும் அதிகரித்த அதிகாரம் என்பவற்றுடன்)<br><br>(ஆ) பொலிஸின் செயற்பாடின்மை குறித்து தேசிய பத்திரிகைகள் சபைக்கு முறைப்பாடுகள் செய்தல்.<br><br>2. தற்போதைய வழக்குகளில் புலன்விசாரணைகளைப் பூர்த்தி செய்தல்.<br><br>3. பொறுப்புள்ள ஊடகத்துறையை முன்னேற்றுதல் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு ஓர் ஒழுக்கக் கோவையை கவனத்தில் கொள்ளுதல். | 1. மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு<br><br>2. பொலிஸ் திணைக்களம்<br><br>3. பத்திரிகைப் பேரவை | 1. ஊடகவியலாளர்களின் குறைகளுக்கு பயனுறுதியான பரிகாரம்.<br><br>2. புலன்விசாரனைகள் பூர்த்தி செய்யப்பட:டுள்ளது. | 12 மாதங்கள் |
| **9.115ஈ** - வடக்கு மற்ம் கிழக்கில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதிப்படுத்துதல். | 1. வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகவியலாளர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு, ஏதேனும் இடையூறுகளிருப்பின், அவற்றை இனங்காணுதல்.<br><br>2. ஏதேனும், இடையூறுகளிருப்பின் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு<br><br>பொலிஸ் திணைக்களம் | 1. ஏதேனும் இடையூறுகளிருப்பின் இனங்காணப்பட்டது.<br><br>2. அனைத்து இடையூறுகளும், ஏதேனும் இருந்திருப்பின், அவை அகற்றப்பட்டுள்ளன. | 6 மாதங்கள் |
| **9.115உ –** தகவல்களுக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டவாக்கத்தை இயற்றுதல். | சட்டவாக்கத்தை வரைவதற்கு பொருத்தமான காலவரைறையை அமைச்சரவை தீர்மானித்தல். | மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு | சட்டவாக்க மன்றத்தினால் அத்தகைய சட்டவாக்கம் ஏற்றுக்கொள்ளப்படுவது தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்களுடன் அமைச்சரவை அலுவலகம் இடைச்செயற்படும். | TBC |

## வாசகர் கருத்துக்கள்

# மொழிப் பிரச்சனைக்கு சட்டத்தால் மாத்திரம் தீர்வு காண முடியாது

நடைமுறையில், ஓர் அரசியலமைப்பின் வெற்றியானது அதனை நடைமுறைப்படுத்தும் நபரின் உளப்பாங்கிலும் செயற்பாட்டிலும் தங்கியிருக்கின்றதே யொழிய அதிலடங்கும் உறுப்புரைகளாலல்ல.

இந்திய நாட்டின் புகழ்பெற்ற சட்ட ஆர்வலரொருவர் அரசியலமைப்பு தொடர்பில் தெரிவித்துள்ள இக்கூற்றானது எந்தளவுக்கு பொருத்தப்பாட்டைக் கொண்டுள்ளதென் அறிவதற்கு, நாம் இக்கூற்றை எமது நாட்டின் அரசியலமைப்பில் காணப்படும் மொழி உரிமையுடன் தொடர்புடைய உறுப்புரைகளுடன் ஒப்புநோக்க வேண்டும்.

இலங்கையில் மொழி உரிமை தொடர்பான சட்டதிட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் எவ்வளவோ காணப்படினும், நடைமுறையில் அதுசார்ந்து எழும் பிரச்சனைகளை உள்வாங்குவதற்குப் போதுமான மிகச்சிறந்த கூற்று இதுவென்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை.

மொழி உரிமை தொடர்பான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினைக் கொண்டுள்ள நபர் எதிர்நோக்கும் உளப்பாங்கு ரீதியான பிரச்சனைகள் இந்நிலைமையின் மற்றுமொரு பரிமாணத்தை வெளிப்படுத்துகின்றது.

எனவே, மொழி உரிமை தொடர்பான சட்டதிட்டங்கள் பயனுறும் அதேசமயம் அது தொடர்பிலான உளப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் ஏற்படுத்துவது முக்கியமானது. இவ்விடயத்தில் விபாஷா போன்றதொரு செய்திமடலுக்கு உளப்பாங்கு ரீதியான மாற்றமொன்றுக்குத் தேவையான அளப்பறிய பங்கினை வகிக்க முடியும். விபாஷா செய்தி மடல் தனியொருவராகவிருந்து இந்த பொறுப்பினை நிறைவேற்ற முடியாது. நாட்டிலுள்ள ஏனைய ஊடகங்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த அனைவரினதும் கவனம் இந்த விடயத்தின்பால் குவிக்கப்படுதல் வேண்டும். அதற்கான விரிவான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான காலம் கைகூடியுள்ளது.

இலங்கையில் மொழி உரிமை விடயத்தில் ஆர்வம் கொண்டுள்ள சமூக அமைப்புகள் உட்பட்ட பொறுப்புக் கூற வேண்டியவர்களின் கவனம் திரும்புமென எதிர்பார்க்கின்றேன்.

**ஜயந்த ஹேவவசே**
அத்துருகிரிய

## பறகடுவ ஹமிங்போர்ட் தமிழ் வித்தியாலம் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது.

பறகடுவ ஹமிங்போர்ட் தமிழ் வித்தியாலயத்தில் 18 ஆசிரியர்களுக்கான தேவை உள்ளபோதும் தற்போது அங்கு 08 ஆசியரிர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையில் 03பேர் மட்டுமே பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக உள்ளனர்.

அப்பாடசாலையில் கடமையாற்றி வந்த ஒரே ஆங்கில ஆசிரியையும் 2008ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணசபையும் அறிந்திருக்கத்தக்கதாக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். 2009-2012 காலப்பகுதியில் 05 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளபோதிலும் அவர்களுக்குப் பதிலாக ஒரு ஆசிரியரேனும் குறித்த பாடசாலைக்கு அனுப்பப்படவில்லை.

ஆரம்பப் பிரிவுக்கென பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாத இப்பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் பதினொன்று வரையான வகுப்புகளில் சுமார் 300 மாண மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர்.

## புதிதாக 540 ஆங்கில ஆசிரியர் நியமனங்கள்

உயர்தர ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைக்கு தீர்வு காணும் வகையில் புதிதாக 540 ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையிலுள்ள பட்டதாரிகளில் சுமார் 200 பேர் வரையிலான ஆங்கிலப் பட்டதாரிகளே காணப்படுவதாகவும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஆங்கில டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்தும் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யவிருப்பதாகவும் கல்வி அமைச்சர் மாண்புமிகு பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## மும்மொழி இலத்திரனியல் அகராதி தற்போது விற்பனையில்

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட இலத்திரனியல் அகராதியொன்றை சந்தைக்கு அறிமுகஞ்செய்ய சாலா (SALA) என்ரஃப்ரயிஸஸ் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை சந்தைக்கு அறிமுகஞ் செய்யும் நிகழ்வு கடந்த யூலை மாதம் 04ஆம் திகதி கொழும்பு கோல்ஃபேஸ் ஹோட்டலில் இடம்பெற்றதோடு தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கு இது பாரியளவில் பக்கபலமாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## உக்ரெயினில் மொழிப் பிரச்சனை தீவிரம்!

சில காலத்திற்கு முன்னர் சோவியத் ஒன்றியத்திற்குச் சொந்தமான ஓர் அரசாக விளங்கிய உக்ரெனில் தோன்றியுள்ள மொழிப் பிரச்சனை காரணமாக அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் ஓர் அங்கமான உக்ரெயின் எண்பதுகளில் அமுலிலிருந்த பெரெஸ்த்ரைகா விளைவாக பிரிந்து சென்றது.

உக்ரெயினின் தற்போதைய சனாதிபதி மொழி பயன்பாடு தொடர்பிலான ஒரு சட்டமூலத்தை அந்நாட்டுப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்துள்ளமையே அங்கு அமைதியின்மை ஏற்பட வழிவகுத்துள்ளது. உக்ரேனில் இன்றளவில் அமுலிலுள்ள உக்ரெயின் மொழிக்கு மேலதிகமாக ரஷ்ய மொழியினையும் அரச கரும மொழியாக மாற்றுவதே இந்தச் சட்டமூலத்தின் நோக்கம். நாட்டிலுள்ள பெரும்பான்மையானோர் உக்ரெயின் மொழியினையும் சிறுபான்மையானோர் இரசிய மொழியினையும் பயன்படுத்துகின்றனர். சிறுபான்மையினரின் பயன்பாட்டு மொழியாகவிருக்கும் இரசிய மொழி அரச கரும மொழியாக இருக்க வேண்டுமென தற்போதைய சனாதிகதி கருதுகிறார்.

உக்ரெயினியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் இதற்கெதிராக கருத்துக்களை முன்வைத்தபோது உக்ரெயினில் ரஷ்ய மொழியினை பேணும் சிறுபாண்மை மக்கள் எதிர்காலத்தில் ரஷ்யாவுடன் இணைந்துவிட வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்தனர்.

சிறுபான்மை மக்களின் மொழி உரிமைக்கு எதிராக இவ்வாறானதொரு எதிர்ப்பலை சுதந்திரத்திற்குப் பின்னரான காலந்தொட்டு ஐம்பதுகள் வரை எமது நாட்டிலும் உருவானதோடு அதன் விளைவாக கலவரங்களும் வெடித்தன. இந்த முரண்நகை பிற்காலத்தில் போருக்கு வழிவகுத்தது. எவ்வாறாயினும், இற்றைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் அரச கரும மொழிகளாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும், மொழி உரிமையினை நடைமுறைப்படுத்துகையில் உருவாக ஒருசில பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் எமது நாடு இன்றளவிலும் வெற்றிபெறவில்லை.

**சந்துன் ஹேவவசே.**

## எமக்கு எழுதுங்கள்

இங்கையின் மொழிக்கொள்கை அதிக அளவில் கலந்துரையாடலுக்கு ஆளான ஒரு தொனிப்பொருளாகும். விபாஷா செய்தி மடல் மூலம் இக்கலந்துரையாடலை மேலும் போஷிக்க விரும்புகின்றோம். இக்கலந்துரையாடலை கட்டியெழுப்புவதில் வாசகர்களாகிய உங்கள் பங்களிப்பு மிக முக்கியமானது. உங்களின் பல்வேறு கருத்துக்கள் தகவல்கள் தரவுகள் என்பவற்றை எழுதுங்கள். விபாஷா செய்தி மடல் இலங்கையில் மொழி உரிமைகள் குறித்து ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

**மொழி உரிமை பற்றிய**

உங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் பிரச்சினைகளையும் எமக்கு எழுதுங்கள்



பதிப்பாசிரியர்,
"விபாஷா" செய்திமடல்
மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்
24/2, 28வது ஒழுங்கை,
ஃப்ளவர் வீதி, கொழும்பு-7
தொ.பே: 0112370801 4
ஃபக்ஸ்: 0112370802

# வடபுலத்தில் மொழி பன்மைத்துவத்திற்கான மார்க்கம்....

பல அரச நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் பெயர்ப்பலகையை அமைத்து நிறுவும்போது அரச கரும மொழிக் கொள்கையை மீறியுள்ள சந்தர்ப்பங்கள் குறித்து பிந்திய விபாஷா இதழ்களின் மூலம் நாம் கவனத்திற்கு கொண்டுவந்தோம். அதேபோன்று கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வீதிப் பெயர்ப் பலகைகளை அமைக்கும்போது உள்ளூராட்சி நிறுவனங்களால் தொடர்ச்சியாக மொழி உரிமை மீறப்பட்டு வந்துள்ளமை குறித்தும் நாம் தொடர்ச்சியாக தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளோம்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த எமது ஊடகவியலாளர்களுக்கு அங்கு இதையொத்த நிலைமை காணப்படுவதை காண முடிந்துள்ளது. கொழும்பில் அமைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகைகள் தனியே சிங்கள மொழியிலும் யாழ்ப்பாணத்தில் தனியே தமிழ் மொழியிலும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலைமை உடனடியாக மாற்றப்பட வேண்டும். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கி வரும் அரச நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் சிங்களம் மற்றும் தமிழ் ஆசிய இரண்டு மொழிகளிலும் தயாரித்து நிறுவப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள சில அரச நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் காணப்படுவதை இப்புகைப்படங்கள் காட்டிநிற்கின்றன.

இந்நிலைமை மாறி வடக்கிலும் மொழி ரீதியான பன்மைத்துவம் வெளிப்பட வேண்டும்.




கோட்டக்கல்வி அலுவலகம் - சண்டிலிப்பாய் (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை - பொது நூலகம் (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)



மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய் (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




சுகாதார வைத்திய அதிகாரி பனிமனை (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




நீர் வேலைப் பகுதி (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




போக்குவரத்துச் சேவை (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)



யாழ் மாநகர சபை தீயணைப்புச் சேவை (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




மானிப்பாய் இந்துக்கல்லூரி (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை உப அலுவலகம் - மானிப்பாய் பட்டினம் (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




வலிகாமம் தெற்மேற்குப் பிரதேச சபை தலைமை அலுவலகம் - மானிப்பாய் (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)




உட்பிரவேசித்தல் தடை செய்யப்பட்டுள்ளது வலிகாமம் பிரதேச சபை - (சிங்கள மொழியில் இடம்பெறவில்லை)

Printed by: Globe Printing Works, No.5 Stork Place, Colombo 10. Tel: 0777315971